JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume 15 | Issue 03 | May 2024 | Mohan C. Lazarus |
Annual Subscription ₹ 100 | Single Copy ₹ 10



# காலத்தை பிரயோஜனப்படுத்து!

உனக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்புகளையும்,
தருணங்களையும் துரிதமாக செயல்படுத்து!

# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாகவோ தெரியப்படுத்துங்கள்.




## உள்ளே...



அழகாய் நடத்துகிறார்! 04



10 காலத்தை பிரயோஜனப்படுத்து!



சிப்பிக்குள் முத்து 16



30 இரயில் பயணம்

**30,000 வாலிபர்கள்**

கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிக்கை உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாக ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். **மேலும் தொடர்புக்கு 9750955547**

JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**

நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.

Phone: 04639-353333 | Cell:9750955547

E-mail: youth@jesusredeems.org

www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்

# துரிதம்!

மார்ச் 26, 2024 நள்ளிரவில் Dali Cargo Ship பழுதான காரணத்தால் Maryland – Baltimoreல் உள்ள பெரிய Bridge ஆன Francis Scott key Bridgeன் மேல் மோதி அதை நிலைகுலைய வைத்தது. மூன்று Football Stadium அளவில் இருக்கும் அந்த Container Vessel மோதியதில் அந்த Bridge இடிந்து தரைமட்டமானது.

அந்த பெரிய Bridgeன் மேல் பல வாகனங்கள் பயணித்துக் கொண்டிருந்தன. இவ்வளவு பெரிய ஆபத்து நிகழ்ந்த போதும் உயிர் சேதம் இல்லாமல் Baltimoreல் உள்ள மக்கள் காக்கப்பட்டனர். Dali கப்பலில் உள்ள 22 crew members மற்றும் Baltimoreல் உள்ள அதிகாரிகள் தான் இதற்கு காரணம். கப்பல் தன் கட்டுப்பாட்டை இழந்ததை உணர்ந்த crew members உடனே Baltimoreல் உள்ள Authoritiesயிடம் சொல்லி, அந்த Bridgeன் மேல் வாகனங்கள் செல்வதை தவிர்த்தார்கள். சரியான நேரத்தில் வந்த தகவல்களை வைத்து துரிதமாய் செயல்பட்டு பல மக்களின் உயிர்களைக் காப்பாற்றினார்கள். Maryland பாலம் இடிந்து விழுந்த போதும், உயிர் சேதம் இல்லாமல் மக்கள் காக்கப்பட்டது மிகவும் ஆச்சரியமான செயல்.

எனக்கன்பான வாலிபனே! இதேபோல் உன் வாழ்க்கையிலும் பல நேரம், ஓர் விபத்து போல பாவமும், சோர்வும், கவலையும், புதிய சவால்களும் உன்னை தாக்கி நிலைகுலைய செய்யும் போது, நீ பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால், உனக்கு சொல்லப்படும் அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிந்து அதை துரிதமாய் நிறைவேற்ற வேண்டும். அந்த கப்பலில் இருந்த 22 பணியாளர்களின் துல்லியமான தகவல்களை கரையில் உள்ள அதிகாரிகள் கேட்டு துரிதமாய் நிறைவேற்றியது போல ஆவியானவரும் உனக்கு அவ்வப்பொழுது கூறும் அறிவுரைகளை காது கொடுத்துக் கேட்டு, தாமதமின்றி உடனே கீழ்ப்படிந்து செயல்படும் போது உன் வாழ்வில்,

- உன் பெலனாகிய பரிசுத்தம்
- உன் மூச்சாகிய விசுவாசம்
- உன் ஆயுதமாகிய ஜெபம்
- உன் பொக்கிஷமாகிய வேத தியானம்

இவை அனைத்தையும் காத்துக் கொள்ள முடியும். அவற்றை நாளுக்கு நாள் மெருகேற்றி, உரமேற்றி உயிர் கொடுத்து, ஒரு எழுப்புதல் வீரனாக இருக்க முடியும்.



வாலிபனே! உனக்கு கிடைக்கும் ஒவ்வொரு தருணத்தையும் தவற விடாதே!

வாலிப மகளே! உனக்கு கிடைக்கும் அத்தனை வாய்ப்புகளையும் ஆதாயப்படுத்து!

காரணம், இந்த நாட்கள் பொல்லாதவைகளானதால், நீ கர்த்தருடைய பாதத்தில் காத்திருந்து பெலனடைந்து எழும்பிப் பறக்க ஆயத்தப்படு!

''கர்த்தர் இந்த கடைசிகால எழுப்புதலில் நம்புவது உன் ஒருவனை மாத்திரம் தான்''.

கிறிஸ்துவின் பணியில்
மோகன் சி. லாசரஸ்

சாட்சி தொகுப்பு: ஜெனிட்டா



# அழகாய் நடத்துகிறார்!



**பெற்றோரின் விருப்பப்படி மருத்துவராக வேண்டுமென்ற ஆசையோடு நன்றாகப் படித்து 10ஆம் வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்ற சகோதரி ஆக்னஸ், தன்னுடைய கனவான மருத்துவப் படிப்பைப் படித்து மருத்துவர் ஆனாரா என்பதை அவர்களிடமே கேட்போம் வாருங்கள்..**








**Interviewer:** ஹாய் ஆக்னஸ்... இந்த **interview** மூலம் இயேசு விடுவிக்கிறார் வாலிபர் உலகம் வாசகர்களுக்கு உங்களை அறிமுகம் செய்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். உங்களைப் பற்றியும் நீங்கள் கடந்து வந்த பாதைகளைப் பற்றியும் தெரிந்துகொள்ள நாங்களும் எங்கள் வாசகர்களும் மிகவும் ஆவலாக இருக்கிறோம்.

**ஆக்னஸ்:** yes... நானும் மிகவும் ஆவலாக இருக்கிறேன். கேளுங்கள் அக்கா நான் சொல்கிறேன்.

**Interviewer:** சரி, ஆக்னஸ் உங்களது குடும்பம் மற்றும் உங்களது சிறுபிராயம் பற்றி சொல்லுங்களேன்?

**ஆக்னஸ்:** நான் தூத்துக்குடி மாவட்டம் சாயர்புரத்தில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் திரு. கபிலன், திருமதி ஹெலன் தம்பதியருக்கு மூத்த மகளாக பிறந்து கிறிஸ்தவ பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்டேன். எனக்கு ஒரு தம்பி இருக்கிறான். சிறு வயதிலிருந்தே எனது பெற்றோர் ஆலயக் காரியங்களில் என்னை ஊக்கப்படுத்தியதால் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வேன். ஆனால் தனிப்பட்ட முறையில் எனக்கும் இயேசுவுக்கும் எந்த உறவும் கிடையாது. எனது பெற்றோர் நான் மருத்துவராக வேண்டுமென்று சிறுவயதிலேயே சொல்லி சொல்லி வளர்த்ததால் நானும் மருத்துவராக வேண்டுமென்ற கனவோடு படித்து வந்தேன்.

**Interviewer:** சரி உங்களுக்கும் உங்கள் பெற்றோருக்கும் நீங்கள் மருத்துவராக வேண்டு மென்ற ஆசை எப்படி வந்தது?

**ஆக்னஸ்:** அன்னை தெரேசாவின் நினைவாக அவரது மறுபெயரான ஆக்னஸ் என்ற பெயரை என் பெற்றோர் எனக்கு சூட்டினர். அதுமட்டுமல்லாமல் நான் பிறந்தபோது ஆக்னஸ் என்று ஒரு மருத்துவர் அந்த மருத்துவமனையில் இருந்ததால், அவர்களைப் போல நானும் மருத்துவராக வேண்டுமென்று எனது பெற்றோர் விரும்பி அப்பெயரை வைத்தனர். எனக்கும் சமூக சேவை செய்வதில் மிகவும் ஆர்வம் இருந்தது.

**Interviewer:** சரி, உங்கள் பெற்றோரின் எதிர்பார்ப்பை அறிந்து படித்து அவர்கள் வாஞ்சையை நிறைவேற்றினீர்களா?

**ஆக்னஸ்:** 10ஆம் வகுப்பு படிக்கும்போது 450/500 மார்க் எடுத்தால் போதும் என்ற மனநிலையோடு படித்து வந்தேன். அதுபோலவே 450 மதிப்பெண்கள் (90%) எடுத்து வெற்றிபெற்றேன். Maths biology குரூப் எடுத்து திருநெல்வேலியில் உள்ள ஒரு பள்ளியில் ஹாஸ்டலில் தங்கி படித்தேன். கொஞ்ச நாட்களிலேயே பெலவீனப்பட ஆரம்பித்ததால், 11ஆம் வகுப்பு பாதியிலேயே எங்கள் ஊரில் உள்ள பள்ளியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தேன். அடிக்கடி பெலவீனப்பட்டதால் சரியாக பள்ளிக்கு சென்று படிக்க முடியாத சூழ்நிலை உருவானது. எப்படியோ 11ஆம் வகுப்பை முடித்தேன். 12ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த நாட்களில், ஒருநாள் எனது கனவை எப்படி நிறைவேற்றுவது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, நாலுமாவடியில் ஒவ்வொரு மாதமும் வாலிபர்களுக்கென்று சினெர்ஜியா என்ற மாதாந்திர கூடுகை நடைபெறுகிறது என்று சொன்னார்கள். நானும் எனது தோழிகளும் அதில் கலந்துகொண்டபோது, அது எனக்கு சற்று வித்தியாசமாக இருந்தது. ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து அதில் பங்குபெற ஆரம்பித்தோம்.

**Interviewer:** சூப்பர்... அப்படின்னா... நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டீர்களா?

**ஆக்னஸ்:** நான் 10ஆம் வகுப்பு படிக்கும்போதே ஆண்டவர் மீது எனக்கு அலாதி அன்பு உண்டானது. அதன்பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஆண்டவரைத் தேட ஆரம்பித்தேன். 12ஆம் வகுப்பு படிக்கும்போது (சினெர்ஜியாவில் கலந்துகொண்ட பிறகு) ஆவிக்குரிய வாழ்க்கையில் மாற்றம் வர ஆரம்பித்தது. இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தில் இணைந்து தன்னார்வமாக ஊழியங்களை செய்ய ஆரம்பித்தேன். ஆண்டவரோடு உள்ள உறவில் வளர ஆரம்பித்தேன். ஒவ்வொரு மாதமும் எனது தோழிகளையும் ஒரு வாகனம் வைத்து அழைத்து வருவேன்.

**Interviewer:** சரி... இயேசுவுக்காக ஊழியம் செய்ய ஆரம்பித்தீர்கள்... நீங்கள் விரும்பின மருத்துவ படிப்பு படித்தீர்களா?

**ஆக்னஸ்:** சொல்றேன்... 12ஆம் வகுப்பிலும் என்னால் பள்ளிக்கு ஒழுங்காக சென்று பாடங்களை சரியாக படிக்க முடியவில்லை, 'எப்படி நான் தேர்வு எழுதி டாக்டருக்கு படிக்க முடியும்' என்று கலங்கி நின்றபோது, ஒரு அக்காவின் சாட்சி எனக்கு விசுவாசத்தைக் கொடுத்தது. அந்த விசுவாசத்தோடு ஜெபித்து தேர்வு எழுதினேன். தேர்வு முடிவுகள் வெளிவந்தபோது, 68% மதிப்பெண்கள் எடுத்து வெற்றிபெற்றேனே தவிர என்னுடைய கனவான டாக்டர் படிப்பை தொடர முடியவில்லை. ஆனால் நான் சோர்ந்து போகவில்லை. எனது பெற்றோரும் என்னை ஊக்கப்படுத்தி தொடர்ந்து படிக்க வைத்தார்கள்.

**Interviewer:** ஓகே... டாக்டர் கனவை அடைய முடியவில்லை... தொடர்ந்து என்ன படித்தீர்கள்?

**ஆக்னஸ்:** எனது அம்மாவின் ஆலோசனையின் படி B.Sc Mathemathics எடுத்தேன். எனக்கு கணக்கு சுத்தமா வரவே வராது. எப்படியாவது கற்றுக்கொள்ளலாம் என்று நினைத்தேன். நான் ஒரு professorரிடம் ஸ்பெஷல் டியூஷனும் சென்றேன். யார் கற்றுக்கொடுத்தாலும் புரிந்து கொள்வது எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. கல்லூரிக்கு சென்றுகொண்டே ஊழியமும் செய்தேன். முதல் செமஸ்டர் முடித்து ரிசல்ட் வந்தது. அதிலும் ஒரு பாடம் தோல்வி அடைந்தேன். அந்த நாளில் எனது கல்லூரியில் நடைபெற்ற programல் 'ஜெயித்திடுவேன் நான் ஜெயித்திடுவேன்' என்ற பாடலுக்கு நான் choreo பண்ண வேண்டியிருந்தது. 'ஒரு பாடம் தோல்வி அடைந்த







சகோதரி ஆக்னஸ் தன் குடும்பத்தாருடன்

நான் எப்படி ஜெயித்திடுவேன் என்று பாட முடியும்'. ஆனாலும், 'எல்லாம் நன்மைக்கே, இயேசு மகிமைப்பட வேண்டும் arrearயை அடுத்த தேர்வில் எழுதி வெற்றி பெறலாம்' என்று அந்த choroவை பண்ணினேன். தொடர்ந்து எல்லா செமஸ்டரிலும் ஏதாவது ஒரு பாடம் arrearவந்துகொண்டே இருந்தது. கடைசி செமஸ்டரில் achievers மீட்டிங்கில் கலந்து கொண்டபோது, 'உன்னை வெற்றி சிறக்கச் செய்வேன்' என்ற வாக்குத்தத்தத்தை கேட்டவுடன், நான் இந்த வருடம் UG முடித்து விடுவேன் என்ற விசுவாசத்துடன் தேர்வும் எழுதினேன். ரிசல்ட் வந்தபோது அதிலும் ஒரு பாடம் arrear வந்தது. என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்போது ஒன்று revaluationக்கு அனுப்பலாம், அல்லது speed Exam எழுதலாம் என்று 2 options எனக்கிருந்தது. நான் speed exam எழுத முடிவு செய்து, யூனிவர்சிட்டியில் சென்று தேர்வு எழுதி first classஇல் வெற்றிபெற்று என் UG degreeயை முடிக்க தேவன் கிருபை செய்தார்.

**Interviewer:** தோல்விக்கு மேல் தோல்வி அடைந்த நீங்கள் போராடி UG முடித்தீர்கள்... தொடர்ந்து என்ன செய்தீர்கள்?

**ஆக்னஸ்:** இதற்குப் பிறகு பி.எட் படித்தேன். அதிலும் கர்த்தர் நல்ல வெற்றியைக் கொடுத்தார். ஊழியத்தில் இன்னும் வளர ஆரம்பித்தேன். பி.எட் முடித்த பிறகு, M.Sc Psychology எடுத்து படித்து அதிலும் நல்ல ஒரு வெற்றியை தேவன் கொடுத்தார். எந்த யூனிவர்சிட்டியில் arrear exam எழுதினேனோ, அதே யூனிவர்சிட்டியில் best student award வாங்கவும் தேவன் கிருபை செய்தார். நான் இப்பொழுது Counseling Psychologistஆக இருக்கிறேன்.

**Interviewer:** சூப்பர்... மருத்துவராக வேண்டும் என்று நினைத்த நீங்கள் இப்பொழுது Psychologistஆக இருப்பதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

**ஆக்னஸ்:** எனக்கு இன்றும் ஆச்சரியத்தை கொடுப்பது என்னவென்றால், 2017 மற்றும் 2018ல் நடைபெற்ற சேனை முகாமின் ஒரு பகுதியில் ''உங்களுக்கு விருப்பமான ஊழியத்தைத் தேர்வு செய்யுங்கள்'' என்று கூறி குழுவாகப் பிரித்தனர். அதில் நான் விளையாட்டாக counseling ஊழியத்தை தேர்வு செய்து அன்றே பயிற்சியும் பெற்றேன். அது இன்று நிறைவேறியுள்ளது. நான் மருத்துவராக வேண்டும் என்பது என்னுடைய விருப்பமே தவிர ஆண்டவருடைய சித்தம் அல்ல என்று எனக்கு ஆரம்பத்தில் புரியவில்லை. ஆனால் கர்த்தர் என்னை இந்த ஊழியத்திற்கென்று தெரிந்து கொண்டு அழைத்து, நான் நினைக்காத பாதையில் நடத்திச் சென்ற போது தான் என்னுடைய அழைப்பை புரிந்துகொண்டேன்.

இன்று கர்த்தர் என்னை அநேக பள்ளிகள், கல்லூரிகளில் ஆலோசனை வழங்க உதவி செய்து வருகிறார். இந்தியா மட்டுமின்றி abroadல் இருந்தும் அநேக clientsகளைத் தந்திருக்கிறார். இன்று நான் என் வேலையையும் ஊழியத்தையும் மிகுந்த மனநிறைவுடன் செய்து வருகிறேன்.

**Interviewer:** அருமை... தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக இருக்கும். ஓகே... ஆக்னஸ் வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**ஆக்னஸ்:** ஏன் நம் வாழ்க்கையில் தோல்வி ஏற்படுகிறது என்று நீங்கள் யோசிக்கலாம். தோல்வி வருகிறதென்றால் ஆண்டவர் நம்மை உருவாக்கி பயன்படுத்த போகிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். Psychologyக்கு maths படித்திருக்க வேண்டும் என்பதை தேவன் அறிந்திருந்ததால் தான் எனக்கு பிடிக்காத maths பாடத்தை படிக்க வைத்தார் என்பதை அதன்பிறகு தான் அறிந்து கொண்டேன். இன்றைக்கு நீங்களும் இதுபோன்ற சூழ்நிலையில் இருக்கிறீர்களா? கர்த்தரிடத்தில் உங்களை ஒப்புக்கொடுங்கள்! அவருடைய வழிகளும் யோசனைகளும் ஆச்சரியமானவைகள். உங்களால் கிரகிக்க முடியாத காரியங்களை உங்கள் வாழ்வில் அவர் நிச்சயம் செய்வார்.

**அன்பான வாலிபர்களே! மருத்துவராக வேண்டும் என்று நினைத்த சகோதரி ஆக்னசை தேவன் தம்முடைய அநாதி தீர்மானத்தின்படி ஆலோசனை உளவியலாளராக மாற்றி அவர்களுடைய வாழ்வில் தம்முடைய சித்தத்தை பரிபூரணமாக நிறைவேற்றி உயர்த்தியுள்ளார். உன் நினைவுகள் என் நினைவுகள் அல்ல என்று சொன்ன தேவன் உங்களையும் தம்முடைய சித்தத்தின்படி அழகாய் நடத்திச் செல்வார். அவர் சத்தம் கேட்டு அவர் சித்தப்படி வாழ உங்களை அர்ப்பணியுங்கள்.**

BIBLE Treasure Hunt

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

வேதாகமத்தில் உள்ள தாய்மார்களைக் குறித்த கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. சரியான விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

## வினாக்கள்

1. ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய் யார்?
2. ஜாதிகளுக்கு தாய் யார்?
3. சகோதரனாலே 'கோடாகோடியாய் பெருகுவாய்' என்று ஆசீர்வாதம் பெற்றது யார்?
4. இஸ்ரவேலிலே தாயாக எழும்பினவள் யார்?
5. தன் மகனுக்கு சின்ன சட்டையைத் தைத்த தாய் யார்?
6. சிங்காசனத்தின் அருகில் உட்கார்ந்த தாய் யார்?
7. தன் குமாரனுக்காக ராஜவம்சத்தாரை அழித்த தாய் யார்?
8. நற்கிரியைகள், தருமங்கள் செய்த தாய் யார்?
9. தான் பெற்ற பிள்ளையை ஒளித்து வைத்த தாய் யார்?
10. வாழ்வில் கசப்பை அனுபவித்த தாய் யார்?




## கடந்த மாத விடைகள்

1. மோசே – ஓரேபில் ஆடுகளை மேய்த்தான் (யாத். 3:1).
2. சவுல் – தன் தகப்பனாரின் கழுதைகளை தேடி சென்றான் (1 சாமு. 9:3).
3. மத்தேயு – ஆயத்துறையில் வரி வசூலித்தான் (மத். 9:9).
4. தாவீது – ஆடுகளை மேய்த்தான் (1 சாமு. 16:11-13).
5. எலிசா – பன்னிரண்டு ஏர் பூட்டி உழுது கொண்டிருந்தான் (1 இராஜா. 19:19).
6. கிதியோன் – கோதுமையை போரடித்துக் கொண்டிருந்தான் (நியா. 6:11).
7. சாமுவேல் – ஆலயத்தில் உதவி செய்தான் (1 சாமு. 3:1-15).
8. ஆமோஸ் – மேய்ப்பன் காட்டத்தி பழங்களைப் பொறுக்குகிறவன் (ஆமோஸ் 7:14).
9. பேதுரு – மீன் பிடித்தான் (மத். 4:18).
10. பவுல் – கிறிஸ்தவர்களை துன்புறுத்தும் வேலை செய்தான் (அப். 9:1,2).

## கடந்த மாத வெற்றியாளர்:

சகோதரி ஜெபிஷா, (சென்னை)

அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.05.2024**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org




ஆலோசனை: அவி

# இனிய திருமணம்!!

**நான் M.A. final year படித்துக்கொண்டிருக்கிறேன். படிப்பு முடித்ததும் திருமணம் செய்ய வேண்டும் என்று என் பெற்றோர் என்னை வற்புறுத்துகிறார்கள். எனக்கு திருமணம் என்றவுடன் மிகவும் பயமாக இருக்கிறது. Because I am an Introvert, அந்த lifeக்குள் enterஆக பிடிக்கவில்லை, பயமாக இருக்கிறது. Please இந்த பயத்தில் இருந்து வெளியே வர உதவி செய்யுங்க – ரேகா, திருப்பூர்.**

அன்பு சகோதரி ரேகா, உங்களின் பயம் ரொம்ப **Common** ஆன ஒன்று. உங்களைப் போல **College** முடிக்கின்ற எல்லா பெண்களுக்கும் ஏற்படுகின்ற பயம் தான் இது. பெற்றோருக்கு அவர்கள் கடமை முக்கியம். எனவே திருமணத்திற்கு ஆயத்தம் செய்கிறார்கள். பெற்றோரிடம் அன்பாக பேசிப் பாருங்கள், அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்றால், எப்படி திருமணத்திற்கு உங்களை தயார் செய்யலாம் என்று யோசிக்க முற்படுங்கள்.

திருமணம் என்றாலே ஒரு புதிய வாழ்க்கை, புதிய நபர், புதிய இடம், புதிய பொறுப்பு என்று பல புதிய காரியங்களையும், புதிய சவால்களையும் சந்திக்கும் நாட்கள் என்று கூட யோசிக்கக் கூடும்.

நீங்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் நீங்கள் உங்களை தயார்படுத்தி, தகுதிபடுத்திக் கொள்ளும் போது, இந்த குடும்ப வாழ்க்கையானது இனிமையாகவும், இன்பமாகவும் மாறும்.

படிப்பிற்கான அறிவையும், ஞானத்தையும் கொடுக்கும் தேவன் மட்டும் அல்ல, அவர் ஒரு வீட்டை கட்டுகிற புத்தியுள்ள ஸ்திரீக்கு ஞானத்தை கொடுக்கிறவர், அவர் உங்களுக்கு புதிய குடும்பத்தை நடத்தவும், அதை நன்கு பராமரிக்கும் பொறுப்புள்ள பெண்ணாகவும் திகழ உதவி செய்வார்.



நீங்கள் **Introvert**ஆக இருக்கலாம், நிச்சயம் உங்கள் கணவர் **Extrovert**ஆக தான் இருப்பார். உங்களிடம் **Positive**ஆக இருக்கும் காரியம் அவரிடம் **Negative**ஆக இருக்கலாம். அதேபோல் உங்களிடம் **Negative**ஆக இருக்கும் காரியம் அவரிடம் **Positive** ஆக இருக்கும்.

## இனிய இல்லறமாக உங்கள் புதிய குடும்பம் அமைய என்ன செய்யலாம்?

### Acceptance (ஏற்றுக்கொள்ளுதல்)

இருக்கிற வண்ணமாக உங்கள் குடும்ப வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள முயலுங்கள். (எங்கள் வீட்டில் இப்படி தான் செய்வோம், எங்கள் அப்பா இப்படித்தான் பண்ணுவாரு என்று பேசுவதை தவிர்க்கவும்).

### Accommodate (இணங்குதல்)

நீங்கள் வசதியான இடத்தில் வாழ்ந்திருக்கலாம். கணவன் வீட்டில் வசதி வாய்ப்புகள் குறைவாக இருந்தால், அதிலும் **adjust** பண்ணி சந்தோஷமாக வாழ்வதற்கு **Try** பண்ணுங்கள்.

### Avoid Blaming (குறை கூறுவதை தவிர்க்கவும்)

ஒருவர் மேல் ஒருவர் குறை கூறுவதையும், குற்றம் சாட்டுவதையும் தவிர்ப்பது சிறந்தது. தவறை ஒப்புக்கொண்டு, உடனே **Sorry** கேட்பது, உறவுகளை மலர செய்வதோடு, அழகாக வளரவும் செய்யும்.

**Compliment often (அடிக்கடி பாராட்டுங்கள்)** எந்த ஒரு நல்ல செயலையும் பாராட்டவும், உற்சாகப்படுத்தவும் முயற்சியுங்கள். திருமண உறவில், **Complimenting with words**

are more powerful than gifts (பரிசுகளை விட வார்த்தைகளால் பாராட்டுவதே சக்தி வாய்ந்தது).

**Don't Damage**

ஒருபோதும் உங்கள் Partnerஐ யார் முன்னாலும் விட்டுக் கொடுக்கவோ, அவர்களை உதாசீனமாய் பேசவோ, அவமானப்படுத்துவோ கூடாது. This will ruin the marriage (இது திருமண வாழ்வை கெடுக்கும்).

இப்படி பல காரியங்களை சிறப்பாக கையாள, இன்றிலிருந்தே முயற்சியுங்கள்.

இதுவரை உங்கள் பெற்றோருக்கு ஒரு சிறந்த மகளாக இருந்த நீங்கள், இனி ஒரு நல்ல மனைவி, பின்னர் தாய், பின்னர் குடும்ப தலைவி என பல பெரிய பொறுப்புகளை சிறப்பாக கையாள தேவனுடைய கிருபையும், ஒத்தாசையும் வேண்டும். ஜெபத்தோடு செயல்படுங்கள். இயேசு உதவி செய்வார்.

**பயம் வேண்டாம், குடும்பப் பயணத்தை தைரியமாய் ஆரம்பிக்க வாழ்த்துக்கள்.**



# நிறம் தடையல்ல!!

**நான் ஏன் குண்டா இருக்கிறேன்? நான் ஏன் கருப்பா இருக்கிறேன்? நான் இப்படி இருக்கிறதினால் கவலைப்படவில்லை. ஆனால் நான் இப்படி இருக்கிறேன் என்று இந்த உலகம் என்னை கவலைப்பட வைக்கிறது. நான் என்ன பண்ணுவது?**

**– ராமலட்சுமி, திருவாரூர்.**

ராமலட்சுமி, நீங்கள் சொல்வது மிகவும் உண்மை. நாமே நம்முடைய பிரச்சனையை நினைக்காவிட்டாலும் இந்த உலகம் அதைப் பற்றி விமர்சனம் பண்ணி நம்மை கவலைக்குள்ளாக்கும்.



ஆனால் உலகத்தின் கூற்று தவறு. கருப்பு அருவெருப்பு என்பது நம் சமுதாயத்தின் கருத்து. அதனால் 'கருப்பாய் பிறந்த நான் வாழவே கூடாது' என்றால், Africa-வில் உள்ளவர்கள் எங்கே போவார்கள். மேலும் கருப்பாக இருப்பவர்கள் அழகு இல்லை என்பதும் தவறு. கருப்பும் ஒரு அழகிய நிறம் தான்.

உலகம் என்னை எப்படி பார்க்கிறது என்பதை விட நான் என்னை எப்படி பார்க்கின்றேன் என்பது தான் மிகவும் முக்கியம். மேலும் அவர்களுடைய கணிப்பும், கருத்தும் என்னிடத்தில் உள்ள ஆற்றலையும், திறமையையும் குறைக்கவோ, அழிக்கவோ முடியாது. ஆனால் நான் என்னை குறித்து தாழ்வாகவும், குறைவாகவும் நினைக்கும் போதே, என்னுடைய வீழ்ச்சி ஆரம்பிக்கின்றது. எனவே ராமலட்சுமி, உலகத்தின் கருத்தையும், மனமடிவாக்கும் வார்த்தையையும் ஒருநாளும் உள்வாங்கி அசைபோட வேண்டாம். அவை துரத்தப்பட வேண்டியவை, தூக்கி எறியப்பட வேண்டியவை.

உலகம் உங்கள் வெளித்தோற்றத்தைப் பற்றி என்ன வேண்டுமானாலும் கூறலாம். ஆனால் உங்களை சிருஷ்டித்த அன்பான தேவன் உங்களைத் தமது சாயலின்படியாகவும் தமது ரூபத்தின்படியும் அழகாய் படைத்துள்ளார் என்று வேதம் சொல்லுகிறது. நீங்கள் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப் பட்டிருக்கிறீர்கள் (சங் 139:14).

எனவே ராமலட்சுமி, உலகம் உங்களைப்பற்றி என்ன சொல்லுகிறது என்பதை நினைத்து மனம் தளராமல் உங்களைப் படைத்த தேவன் உங்களைக் குறித்து என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள். நீங்கள் சாதிக்க, வாழ்வில் முன்னேற நிறமோ அழகோ ஒரு தடையல்ல. தடைகளைத் தாண்டி செல்லுங்கள். கடல் அலையைத் தாண்டி செல்லும் கட்டுமரமும், கப்பலும் ஆழமான இடத்தில சென்று வலை நிறைய மீன்களை பிடிக்க முடியும். உலகம் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு, கரையிலேயே ஒதுங்கி விடாதீர்கள்! தாண்டி செல்லுங்கள்! தங்கத்தை வெல்லுங்கள். வெற்றிப் பயணம் தொடரட்டும்!!

முகப்பு செய்தி: சதீஷ்



# காலத்தை பிரயோஜனப்படுத்து!

**மே மாதம் வந்து விட்டாலே எல்லோர் மனதிலும் விடுமுறையில் என்ன செய்வது? எங்கு செல்வது? என்று யோசனைகள் பல வந்தாலும், கோடை காலத்தில் சுற்றுலா தளங்கள் நிரம்பி வழிவதைத் தவிர்க்க முடியாது. கொண்டாட்டம் ஒருபுறம் இருந்தாலும், இந்த கோடை காலத்தை எப்படி பிரயோஜனப்படுத்த போகிறோம் என்பதுதான் முக்கியம். காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில் கண்ணீர் விட வேண்டிய நிலமை வந்து விடும். நம்முடைய வாழ்வில் பணத்தை வீணாக்கினால் கூட திரும்ப பெற்றுக் கொள்ளலாம். நேரத்தை வீணாக்கினால் திரும்ப பெற்றுக் கொள்ள முடியாது. "அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது" என்பதைப் போல, செலவழிந்த நாட்கள் மீண்டும் திரும்ப வரவே வராது என்பதை மனதில் கொண்டு நாம் செயல்பட வேண்டும்.**

இன்றைக்கு நம் கையில் இருக்கும் செல்போனும் சமூக வலைத்தளங்களும் நேரத்தை வீணாக்கி விடுவது மட்டுமில்லாமல், நம்மை பாவத்திலும் அடிமைத்தனத்திலும் வீழ்த்தி நம்முடைய நேரத்தை வீணாக்கி விடுகின்றன. நேரத்தை வீணாக்கி பாவத்தில் விழுந்த தாவீதைக் குறித்து வேதம் நம்மை எச்சரிக்கிறது. **"மறுவருஷம் ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் வந்தபோது, தாவீது யோவாபையும், அவனோடேகூடத் தன் சேவகரையும், இஸ்ரவேல் அனைத்தையும், அம்மோன் புத்திரரை அழிக்கவும், ரப்பாவை முற்றிக்கைபோடவும் அனுப்பினான். தாவீதோ எருசலேமில் இருந்துவிட்டான்"** (2 சாமு. 11:1). தாவீது நேரத்தை சரியாகப் பயன்படுத்தவில்லை. யுத்த களத்தில் தன்னுடைய நேரத்தை செலவழிக்க வேண்டிய தாவீது அதை செய்யாமல் விட்டு விட்டதால் இச்சையில் விழுந்து பாவத்திற்கு மேல் பாவம் செய்து தேவனை துக்கப்படுத்தினார். காலத்தை நிதானித்து செயல்பட்டு இருந்தால், இப்படிப்பட்ட கொடிதான பாவத்தில் தாவீது விழுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்திருக்கும்.



நம்மில் அநேகர் காலத்தையும் நேரத்தையும் அறிந்து செயல்படுவது இல்லை. காலமும் நேரமும்

யாருக்காகவும் காத்திருக்காது. **“தேட ஒரு காலமுண்டு, இழக்க ஒரு காலமுண்டு;...”** (பிரசங்கி 3:6). எனவே உங்களுக்கு இருக்கும் காலத்தை சரியான முறையில் பயன்படுத்துங்கள். இந்த கோடை விடுமுறையில் செல்போனிலும், சமூக வலைத்தளங்களிலும் நேரத்தை வீணாக்காமல் சரியாக திட்டமிட்டு காலத்தை பிரயோஜனப்படுத்த ஆரம்பியுங்கள். உங்களுடைய நேரத்தை மற்றவர்கள் தங்கள் சுய நலத்திற்காக பயன்படுத்திக் கொள்ள ஒரு போதும் அனுமதிக்காதீர்கள். உங்கள் நேரத்தை உங்களுக்காகவே அன்றி, அடுத்தவர்களுக்காக இழக்காதீர்கள். உங்கள் நேரத்தை உங்களுடைய இலக்குகளை அடையும் முயற்சிக்காக செலவிடுங்கள். ஒருவேளை உயர்படிப்பிற்காக அல்லது வேலைக்காக காத்திருந்தால், அடுத்தது என்ன செய்யலாம் என்று சிந்தித்து செயல்படுங்கள். எதையும் நாளை செய்யலாம் என்று தள்ளிப் போடாமல் தற்போது இருக்கும் காலம் மட்டுமே உங்களுடையது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.



அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய வாழ்க்கையில் காலத்தின் அருமையை அறிந்து செயல்பட்டபடியினால் அநேக பட்டணங்கள் மற்றும் கிராமங்களில், **“தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்”** (அப். 9:20). இதுமட்டுமின்றி இவருடைய 45 வயது முதல் 57 வயது வரையான காலங்கள் மிகவும் முக்கியமானதாகும். இந்த காலத்தில் மூன்று மிஷனெரி பயணங்களை மேற்கொண்டு கிறிஸ்துவை மகிமைப்படுத்தினார். இவை எல்லாவற்றிக்கும் மேலாக புதிய ஏற்பாட்டில் 27 புத்தங்களில் 14 நிருபங்களை எழுதி தேவன் அவருக்கு கொடுத்த நேரத்தை சரியாக பயன்படுத்தினார். தன்னுடைய ஊழிய நாட்களெல்லாம் காலத்தை நிதானித்து ஊழியம் செய்தபடியால் அவருடைய ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்தார். உங்களுடைய வாழ்க்கையை உலக சிற்றின்பங்களுக்காக எவ்வளவு காலங்களை வீணடித்து உள்ளீர்கள் என்று சற்றே நிதானித்து பாருங்கள். இனியுள்ள காலத்தையாவது நீங்கள் ஆதாயம் செய்து கொள்ள வேண்டும். காலமும் நேரமும் தேவன் உங்களுக்காக கொடுக்கிற கிருபையின் தருணங்கள் என்பதை மறக்காதீர்கள்.

இந்த கோடை விடுமுறை நாட்களை சரியாக பயன்படுத்தி உங்களால் இயன்ற ஊழியத்தை உங்கள் சபைகளிலோ அல்லது ஏதாவதொரு ஊழியத்தில் இணைந்தோ ஊழியம் செய்யலாம். ஏனெனில் **“நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்”** (எபே. 5:16).

பூமியில் அவருடைய ஊழியத்தின் நாட்கள் மூன்றரை ஆண்டு காலந்தான் என்பதை இயேசு காலத்தின் அருமையை நன்றாக அறிந்திருந்தார். இந்த காலத்தில் அவர் எவ்வளவு துரிதமாக உழைத்து வேகமாக ஊழியம் செய்தார் என்பதை வேதம் நமக்கு கற்றுக் கொடுக்கிறது. **“பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது’’** (யோவான் 9:4). காலம் எவ்வளவு முக்கியம் என்பதை உலகத்திற்கு உணர்த்துவதற்காக அவர் காலத்தை பகற்காலம் மற்றும் இராக்காலம் என்று இரண்டாகப் பிரித்தார். பகற்காலம் கிருபையின் நாட்களைக் குறிக்கிறது. இந்நாட்களில் நாம் எவ்வளவு ஆத்துமாக்களை ஆதயாம் செய்ய வேண்டுமோ செய்துவிட வேண்டும். ஏனெனில் ஒருவரும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது. அந்நாட்களில் நாம் ஒன்றும் செய்ய முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**எனக்கன்பான வாலிபர்களே, இந்த பூமிக்குரிய வாழ்க்கையின் வழியாக நீங்கள் ஒரே ஒரு முறைதான் கடந்து செல்கிறீர்கள். நீங்கள் நடந்த பாதையில் ஒரு போதும் திரும்பிச் செல்ல முடியாது. எனவே இருக்கும் காலத்தை சரியாக பயன்படுத்த முற்படுங்கள். பூமியிலே நாம் வாழ்கின்ற நாட்களையும் செலவழிக்கிற நேரத்தையும் கர்த்தர் பார்த்துக் கொண்டேயிருக்கிறார். எனவே உங்களுடைய வாழ்க்கையில் நேரத்தை சரியாக பயன்படுத்தி அதன்மூலம் நித்தியத்தை சம்பாதித்துக் கொள்ளுங்கள். கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளருங்கள். நாட்களை சரியாக பயன்படுத்தி தாலந்துகளைச் சம்பாதியுங்கள், அப்பொழுது நீங்கள் என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டு இருப்பீர்கள்.**

# உன் விசுவாசம் எங்கே?





செய்தி: மோகன் சி. லாசரஸ்

**"பின்பு ஒருநாள் அவர் தமது சீஷரோடுங்கூடப் படவில் ஏறி: கடலின் அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார்; அப்படியே புறப்பட்டுப் போனார்கள். படவு ஓடுகையில் அவர் நித்திரையாயிருந்தார். அப்பொழுது கடலிலே சுழல்காற்று உண்டானதால், அவர்கள் மோசமடையத்தக்கதாய்ப் படவு ஜலத்தினால் நிறைந்தது. அவர்கள் அவரிடத்தில் வந்து, ஐயரே, ஐயரே, மடிந்துபோகிறோம் என்று அவரை எழுப்பினார்கள்; அவர் எழுந்து, காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார்; உடனே அவைகள் நின்றுபோய், அமைதலுண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: உங்கள் விசுவாசம் எங்கே என்றார். அவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு: இவர் யாரோ, காற்றுக்கும் ஜலத்துக்கும் கட்டளையிடுகிறார், அவைகளும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்" (லூக்கா 8:22–25).**

இயேசு தன் சீஷரோடுகூட படவில் ஏறி கலிலேயாவிற்கு பிரயாணப்பட்டார். இயேசு படவில் அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்று சொல்லி சீஷரோடு பிரயாணப்படும்போது, களைப்படைந்தவராய் படவில் நித்திரை செய்ய ஆரம்பித்து விட்டார். ஏனென்றால், அவர் அதிகாலையில் எழும்பி ஜெபம் செய்வார், மாலையில் ஜெபிப்பார், தினந்தோறும் மக்கள் மத்தியில் ஊழியம் செய்து, அற்புதங்களை செய்து, களைப்படைந்து போவதினால் பிரயாணங்களில் தான் அவர் நித்திரை செய்ய நேரம் கிடைத்தது.



அவர் நித்திரையடைந்த நேரத்தில், சுழல் காற்று உண்டாகி, படகு அமிழ்ந்து போகத்தக்கதாக தண்ணீர் படகின் உள்ளே வர ஆரம்பித்து விட்டது. உடனே சீஷர்கள் தண்ணீரை அப்புறப்படுத்தி தங்களை காப்பாற்றிக்கொள்ள பிரயாசப்பட்டு அவர்களால் முடியாத சூழ்நிலை வந்த போது,''நாங்கள் எல்லாரும் மடிந்து போகப் போகிறோம், நீர் நித்திரைப் பண்ணிக் கொண்டிருக்கிறீர்'' என்று சொல்லி இயேசுவை எழுப்பினார்கள். உடனே இயேசு எழுந்து காற்றையும் கடலையும் நோக்கி ''இரையாதே அமைதலாய் இரு' என்று அதட்டினார்; காற்று அமர்ந்து விட்டது. வியாதியஸ்தரைப் பார்த்து 'வியாதி போகட்டும்' என்றதும் வியாதி



போய்விடுகிறது, 'எழுந்து நட' என்று சொன்னதும் சப்பாணிகள் எழுந்து நடக்கிறார்கள், பிசாசை விரட்டினால் பிசாசு போய்விடுகிறது, இப்போது இயற்கையைகூட அவர் அதட்டினால் அமைதியாகி விடுகிறது என்று சீஷர்கள் எல்லாரும் ஆச்சரியப்படுகிறார்கள்.

**இப்போது, இயேசு சீஷர்களைப் பார்த்து உங்கள் விசுவாசம் எங்கே? ஏன் பயந்தீர்கள்? ஏன் அமிழ்ந்து போகிறோம் என்று அலறினீர்கள்? ஏன் கலங்கினீர்கள்?** என்று கேட்கிறார். அதற்கு அவர்கள் சுழல் காற்று அடித்து, தண்ணீரெல்லாம் படகுக்குள் வந்து, கடல் பயங்கரமாக சீறிக்கொண்டு வந்தது, அதனால் அமிழ்ந்து விடுவோமோ என்று நாங்கள் பயந்து விட்டோம் என்று கூறினார்கள். அதற்கு இயேசு, உங்களுடைய விசுவாசம் எங்கே? என்று கேட்கிறார். கடன் பிரச்சனை என்கிற காற்று மோதுகிறதா? வியாதி என்கிற சுழல் காற்று மோதிக் கொண்டிருக்கிறதா? திருமண பிரச்சனை என்கிற காற்று வீசிக் கொண்டிருக்கிறதா? வறுமை என்கிற பெருங்காற்று மோதிக் கொண்டிருக்கிறதா? இப்படி இன்றைக்கு உங்களுடைய வாழ்க்கைப் படகில் பலவிதமான காற்றுகள் வந்து மோதிக்கொண்டிருக்கிறதா? நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? ஏன் கலங்குகிறீர்கள்? சூழ்நிலையைப் பார்த்து நீங்கள் கலங்க காரணம் என்ன? இயேசு உங்களைப் பார்த்து, உங்கள் விசுவாசம் எங்கே? என்று கேட்கிறார்.

## இயேசு ஏன் அப்படி கேட்கிறார்...

எந்த போராட்டம் வந்தாலும், எத்தனை சுழல் காற்று வந்தாலும், எத்தனை கொந்தளிப்பு வந்தாலும், நீங்கள் விசுவாசமாக இருந்தால் அதை மேற்கொள்ள முடியும். நீங்கள் விசுவாசத்தோடிருந்தால் எந்த சுழல் காற்றையும் ஜெயிக்க முடியும். நீங்கள் விசுவாசத்தோடிருந்தால் அக்கரை சேர முடியும். அதற்கு தேவன் எதிர்பார்க்கிற காரியம் விசுவாசம். அதற்குத்தான் இயேசு ''உங்கள் விசுவாசம் எங்கே'' என்று கேட்கிறார்.

40 வருடங்கள் வனாந்திரத்தில் 30 லட்சம் பேருக்கு குறைவில்லாமல் ஆகாரம் கொடுத்து வழிநடத்தின ஆண்டவர், உங்களுக்கு ஒரு வேலை தரமுடியாதா? உங்களுக்கு ஒரு தொழில் தர முடியாதா? உங்கள் பிள்ளைகளை படிக்க வைக்க முடியாதா? உங்கள் பிள்ளைகளைப் போஷிக்க முடியாதா? உங்கள் ஊழியத்தின் தேவைகளை சந்திக்க முடியாதா? எல்லாம் அவரால் முடியும். ஆனால் ''உங்கள் அவிசுவாசத்தினால் தான் நீங்கள் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறீர்கள், நீங்கள் சந்தேகப்பட்டு, என்னைத் தேடாமல், சூழ்நிலையைப் பார்க்கிறதினால்தான் நீங்கள் பயந்து, அமிழ்ந்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் இருக்கிறீர்கள்'' என்று ஆண்டவர் சொல்கிறார்.

அநேகர் கலங்கிப் போக காரணம் என்ன தெரியுமா? உங்கள் படிப்பு பட்டத்தை நம்புகிறீர்கள். உங்கள் தொழிலை நம்புகிறீர்கள், வேலையை நம்புகிறீர்கள். இயேசுவின் மேல் வைக்கிற நம்பிக்கையைவிட உங்கள் வேலையின் மீது, தொழிலின் மீது அதிக நம்பிக்கை வைக்கிறதினால் தான் வேலையில் இழப்பு வருகிறது. தொழிலில் நஷ்டம் வருகிறது, பிள்ளைகள் மீது விசுவாசம் வைக்கிறதினால் தான் பிள்ளைகள் கைவிட்டு விடுகிறார்கள். யாரையும் எதையும் சார்ந்து நிற்காமல், இயேசுவை சார்ந்து நிற்கப் பழக வேண்டும். உங்கள் விசுவாசம் இயேசுவின் மேல் இருக்க வேண்டும். அப்பொழுது கர்த்தர் உங்களை அக்கரையில் கொண்டு போய் சேர்ப்பார். அமிழ்ந்து போக விடுகிற தேவன் அல்ல நம் தேவன். படகின் சுக்கானாகிய இயேசு உங்கள் வாழ்கைப்படகில் இருப்பதால் விசுவாசத்தோடு பிரயாணப்படுங்கள்; நிச்சயம் சேதமின்றி அக்கரைப்படுவீர்கள்!

**அன்பான வாலிபர்களே! பிரச்சனை, போராட்டம், நெருக்கத்தில் என்ன செய்வது என்று கலங்குகிறீர்களா? கர்த்தரை விசுவாசியுங்கள், நீங்கள் விசுவாசித்தால் அற்புதத்தை பெற்றுக் கொள்ள முடியும், விடுதலை பெற முடியும், ஆசீர்வாதத்தைப் பெற முடியும், இயேசுவின் மேல் வைக்கிற விசுவாசம் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். உங்கள் விசுவாசத்தை பெலப்படுத்துங்கள். அற்புதத்தை காணுங்கள்!**

சுவிசேஷ பயணம் ஜெனிபர்






ஆமாங்க, நாம உண்மையிலேயே பாக்கியசாலிகள் தான். ஏன் தெரியுமா? மரித்து உயிரோடு எழுந்த தேவனை நாம ஆராதிச்சிட்டு இருக்கோம். அப்போ நாம பாக்கியசாலிகள் தானே! அது சரி, நம் தேவனை உயிருள்ளவராக நிரூபிக்க நாம் என்ன செய்யப் போகிறோம்? நாமும் நம்ம தீமோத்தேயுவைப் போல களத்தில் இறங்கலாமா?

கடந்த மாதம், தீமோத்தேயு ஊழியத்திற்கு அழைக்கப்பட்டதையும், அவர் தனது ஊழியத்தை தொடங்கின நாட்களில் சபைகள் வளர்ந்து பெருகினதையும் பற்றிப் பார்த்தோம். ஊழியத்திற்கு சென்ற தீமோத்தேயு வெறும் வளர்ச்சியை மட்டும் கண்டாரா? நாம் ஒரு விஷயத்தை துவங்கும் போது, அதில் வளர்ச்சியை மட்டும் அல்ல தோல்விகளையும், எதிர்ப்புகளையும் சந்திப்போம் அல்லவா? அதுபோலவே தீமோத்தேயுவின் வாழ்வில் என்னதான் நடந்தது, தீமோத்தேயு எவைகளை எதிர்கொண்டார், என்று இந்த மாதம் பார்க்கலாமா? வாங்க தொடருக்குள் போகலாம்.

தீமோத்தேயு அப்போஸ்தலனாகிய பவுலின் குழுவினரோடு சேர்ந்து கொண்ட பிறகு அவர்கள் பிரிகியா, கலாத்தியா போன்ற ஆவியானவர் சொல்லுகிற இடங்களுக்கு மட்டுமே சென்று நற்செய்தியை அறிவித்து வந்தார்கள். ஆவியானவரால் தடை செய்யப்பட்ட இடங்களுக்கு போகவில்லை. ஒருநாள் மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் பவுலிடம் வந்துநின்று, நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக தரிசனம் கண்டார் **(அப் 16:9)**. அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் அழைத்தாரென்று பவுல் நிச்சயித்துக்கொண்டு, உடனே குழுவாக தீமோத்தேயுவுடன் மக்கெதோனியாவுக்குப் புறப்பட முடிவு செய்தார் **(அப்.16:10)**.

கடல் பயணமாக, மக்கெதோனியா தேசத்தை சேர்ந்த பிலிப்பி பட்டணத்திற்கு இவர்கள் வந்தார்கள். அங்கே ஒரு ஆற்றினருகே அமர்ந்து அநேக ஸ்திரீகளுக்கு நற்செய்தி கூறினார்கள். அந்த நற்செய்தியைக் கேட்ட லீதியாளும் அவள் குடும்பமும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். தீமோத்தேயுவுக்கு சொல்லொண்ணா மகிழ்ச்சி. நாம் ஒருவருக்கு சுவிசேஷம் சொல்லி அவர்கள் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுக்கும் பொழுது, நாம் மட்டுமல்ல நம்மோடு கூட பரலோகமும் சேர்ந்து சந்தோஷப்படும் அல்லவா? அப்படித்தானே வேதமும் சொல்லுகிறது.



அடடா... தீமோத்தேயு ஊழியத்திற்கு வந்ததும் ஒரு பக்கம் சபைகள் வளர்ந்து பெருகுகிறது, மறுபக்கம் குடும்பமாக இரட்சிக்கப்படுகின்றனர், ஆனால் எல்லா நேரமும் இதே சூழல் காணப்படவில்லை. ஒருநாள் குறி சொல்லுகிற ஒரு பெண் இவர்களை உன்னதமான தேவனுடைய ஊழியர்கள் என்று பாராட்டிக் கொண்டிருந்தாள். இப்படியே அநேக நாட்களாக செய்து கொண்டிருந்ததைப் பார்த்த பவுல், கோபம் கொண்டு, அவளிடமிருந்த குறி சொல்லும் ஆவியை துரத்தி விட்டார். அதைக்கண்ட அவளுடைய எஜமான்கள் அவளுடைய வருமானம் பாதிக்கப்பட்டதால் கோபம் கொண்டு பவுல், தீமோத்தேயு மற்றும் அவரது குழுவினரையும், அந்த பட்டணத்தில் உள்ள அதிகாரிகளுக்கு முன்பாக இழுத்துச் சென்றனர். அவர்கள் செய்த நற்செய்திப் பணியை காரணம் காட்டி இவர்கள் மீது குற்றம் சுமத்தினர். இதைக்கேட்ட ஜனங்கள் அவர்களுக்கு விரோதமாக எழும்பி அவர்களுடைய வஸ்திரங்களை கிழித்து பயங்கரமாக அடித்து சித்திரவதை செய்தனர். பவுலும் சீலாவும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். தீமோத்தேயு தனது முதல் பயணத்திலேயே இந்த பயங்கரமான அனுபவத்தைப் பெற்றார். அதே வேளையில் அவர்கள் ஆண்டவரால் அதிசயக்கத்தக்க முறையில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதையும் கண்கூடாக கண்டார். இது அவருடைய விசுவாசத்தை பலப்படுத்தியது.



தெசலோனிக்கே பட்டணத்திலும் யூதர்கள் பவுலுக்கு விரோதமாக எழும்பி கலகத்தை உண்டாக்கினார்கள். பெரோயாவிலும் இதே நிலைத் தொடர்ந்தது. எனவே சீலாவும், தீமோத்தேயுவும் அந்த பட்டணத்திலேயே இருந்துவிட்டு பவுலை கடல் மார்க்கமாக அனுப்பிவிட்டனர். கோட்டை சுவர் போன்று இருந்த, பவுல் அப்போஸ்தலனின் துணையில்லாமல், இவர்கள் தனியாக கலகக்காரர்களை சந்திக்க நேரிட்டிருக்கும். இந்த அனுபவம் தீமோத்தேயுவிற்கு எதிர்ப்புகளை சமாளிக்கும் மனோபாவத்தையும், விசுவாசத்தையும் உருவாக்கிக் கொடுத்திருக்கும் அல்லவா?

**"கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல"** (லூக்கா 9:62) என்று வேதம் சொல்லுகிறது. கலப்பையின் மேல் கை வைத்த தீமோத்தேயு எதிர்ப்புகளையும் சவால்களையும் கண்டு அஞ்சவில்லை. சூழ்நிலைக்கேற்றவாறு கிறிஸ்துவுக்குள் தன்னை பக்குவப்படுத்திக் கொண்டார். அவர் ஊழியம் செய்த எல்லா இடங்களிலேயும் வரவேற்பு கிடைக்கவில்லை. மாறாக, ஒருசில இடங்களில் அவமானங்களையும், பாடுகளையும் எதிர்கொள்ள நேர்ந்தது. ஆனாலும் உறுதியாகவும், துணிவுடனும் தொடர்ந்து கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தார். இந்த சிறு வயதிலேயே இவ்வளவு பெரிய பேரலையிலும் எதிர்நீச்சல் அடித்து வெற்றிக்கண்ட தீமோத்தேயுவின் இந்த குணம் அதாவது எதிர்ப்புகள் மத்தியில் முன்னேறி செல்லும் இந்த தன்மை பாராட்டுதலுக்குரியது அல்லவா? பொதுவாகவே இளைஞர்கள் என்றாலே prestige பார்ப்பார்கள். ஒருவேளை அவர் அவமானப்பட்ட இடங்களில் Prestige பார்த்திருந்தால், இந்த ஊழியத்தை தொடர்ந்து செய்திருக்க முடியுமா? அல்லது பயந்து பின்வாங்கி போயிருந்தால் லீதியாள், கொர்நேலியு, சிறைச்சாலை அதிகாரி போன்றவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்க முடியுமா? அதற்கான பலன் தான் இவருக்கு கிடைத்திருக்குமா? தீமோத்தேயு பயந்த சுபாவம் கொண்டவர் தான், ஆனால் அந்த கடினமான சூழ்நிலைகளிலும் ஆவியானவரின் துணையுடன் தைரியம் உள்ளவராக தன்னையே செதுக்கிக் கொண்டார். ஒருவேளை நீங்கள் நன்றாக ஊழியம் செய்து கொண்டிருக்கும் பொழுது ஒரு சிலருடைய வன்மையான சொற்கள் உங்களை புண்படுத்தி, நீங்கள் தொடர்ந்து ஊழியம் செய்ய முடியாதபடி தடையாய் இருந்திருக்கலாம். அல்லது பல சவால்களையும் எதிர்ப்புகளையும் ஊழியத்தில் நீங்கள் சந்தித்திருக்கலாம். அவைகளைக் கண்டு செயலற்று இருப்பீர்களானால் கவலைப்படாதிருங்கள்.

தீமோத்தேயுவைப் போல நீங்களும் ஒப்புக்கொடுங்கள், யாருக்குத் தெரியும் ஒருவேளை பெரிய இராஜாக்கள் மற்றும் அதிகாரிகள் இரட்சிக்கப்பட, நீங்களும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு பாத்திரமாய் கூட இருக்கலாமே!

**- வீர சகாப்தம் தொடரும்...**

வேதாகம கதாபாத்திரம்: சுமா

# சிப்பிக்குள் முத்து



## எப்பாப்பிரா

*அன்பான இளம் வாலிபர்களே, சிப்பிக்குள் முத்து என்ற தொடரில் உங்களைச் சந்திப்பது மிகவும் சந்தோஷம். இத்தொடரில் இம்மாதம் நாம் பார்க்க இருக்கும் தேவ மனிதர் எப்பாப்பிரா.*

நாம் பிலிப்பியரில் பார்த்த எப்பாப்பிரோதீத்துவுடன் இந்த எப்பாப்பிராவை சேர்த்து குழப்பிவிடக் கூடாது. இருவரும் வேறு வேறு நபர்கள். யார் இந்த எப்பாப்பிரா? என்ற கேள்வி அநேகருக்கு வரும். கொலோசெயர் நிருபம் எழுதப்பட்ட காலக் கட்டத்தில் அப்போஸ்தலனாகிய பவுலோடு சிறையில் இருந்தவர் இந்த எப்பாப்பிரா. ஆசியா முனையின் லியூக்கஸ் நதிப்படுக்கையில் கிறிஸ்தவ சபைகள் இருந்த மூன்று இடங்களில் ஒன்றாகிய கொலோசெயிலிருந்து வந்தவர் இந்த எப்பாப்பிரா.

அப்போஸ்தலனாகிய பவுல் எப்பாப்பிராவை அறிமுகம் செய்யும் போது எப்பாப்பிரா கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியக்காரன் என்று குறிப்பிடுகிறார் (கொலோசெயர் 1:7). எப்பாப்பிரா எப்பொழுதும் ஜெபிக்கிறவராக இருந்தார். ஜெபத்தில் போராடுகிற ஒரு ஜெப வீரனாக இருந்தார். சிறைச்சாலையில் ஜனங்களுக்காக போராடி ஜெபிக்கின்ற ஜெய வீரர்.

எப்பாப்பிரா கொலோசெயர், லவோதிக்கேயர், மற்றும் எராப்போலியர் தேவனுக்கு சித்தமானவைகள் எல்லாவற்றிலும் தேறினவர்களாக வேண்டுமென்று மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாய் இருந்தார் என்று அப்போஸ்தலனாகிய பவுலே இவரைக்குறித்து சாட்சி கொடுக்கின்றார் (கொலோ. 4:12, 13). பவுலோடு ரோமில் கைதியாக இருந்தாலும் தன் குருவைப் போலவே ஜனங்களைப் பற்றி சிந்தித்து அவர்களுக்காக உண்மையாக ஜெபித்தவர் இந்த எப்பாப்பிரா.



எப்பாப்பிரா என்றாலே போராடி ஜெபித்த உண்மையுள்ள கிறிஸ்தவன். தன்னுடைய எல்லா சூழ்நிலையின் மத்தியிலும் மற்றவர்களுக்காக ஜெபித்தவர். ஜனங்களைப் பற்றி கிறிஸ்துவுக்குள் சிந்தித்துக் கொண்டிருந்த தேவமனிதர். இவரைப்பற்றி சுருக்கமாக சொன்னால் பிரியமானவன் (கொலோ. 1:7), உடன்வேலையாள் (கொலோ. 1:7), உண்மையுள்ள ஊழியன் (கொலோ. 1:7), கற்றுக் கொடுப்பவன் (கொலோ. 1:7), வாழ்த்துகிறவன் (கொலோ. 4:12), நல்லுறவுள்ளவன் (கொலோ. 4:12), போராடி ஜெபிக்கிறவன் (கொலோ. 4:12). நம்முடைய சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும் ஜெபத்தில் போராட வேண்டும் என்பது தேவனின் சித்தமாயிருக்கிறது. அதை நாம் எப்பாப்பிராவினிடத்திலிருந்து கற்றுக் கொள்வோம்.

# அன்னையர் தினம்

# HAPPY Mother's Day

## May 12

**உலகில் வெவ்வேறு தினங்களில் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவில் மே இரண்டாவது சனிக்கிழமையை அன்னையர் தினமாக கொண்டாடி வருகிறோம். இந்த வருடம் மே 12ஆம் தேதி அன்னையர் தினமாக அனுசரிக்கப்பட இருக்கின்றது. நமது அன்பையும் நன்றியையும் நம் தாய்க்கு தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவே அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது.**

**உங்கள் அம்மாவிடம் நன்றியையும், அன்பையும் வெளிப்படுத்த...**

### பிடித்த உணவை சமைத்து கொடுங்கலாம்:

உங்கள் தாய்க்கு பிடித்த உணவை நீங்களே சமைத்து, அவர்களை சாப்பிட வைக்கும்போது நீங்கள் தாயின் மீது எவ்வளவு அக்கறை காட்டுகிறீர்கள் என்பதை காண்பிக்கும். உங்களுக்கு சமைக்க தெரியவில்லையென்றால் உணவகத்தில் ஆர்டர் செய்து வாங்கி கொடுத்து சாப்பிட வைக்கலாம்.

### உல்லாச பயணம் அழைத்து செல்லலாம்:

இந்த முக்கியமான நாளைக் கொண்டாட குடும்பத்துடன் சுற்றுப்பயணம் செல்லலாம். அல்லது அம்மா விரும்புகிற மால் அல்லது அவரது பெற்றோர் அல்லது தோழிகளுடன் நேரத்தைச் செலவிட அழைத்து செல்லலாம். அல்லது அவர்கள் பார்க்க விரும்பும் இடத்திற்கு அழைத்து செல்ல திட்டமிடுங்கள்.

### கையால் எழுதப்பட்ட கடிதங்கள் கொடுக்கலாம்:

உங்கள் தாயை நீங்கள் எவ்வளவு நேசிக்கிறீர்கள் என்பதை வெளிப்படுத்த இது ஒரு சிறந்த வழியாகும். நீங்கள் அவர்கள் மீது எவ்வளவு மரியாதை மற்றும் அன்பு வைத்திருக்கிறீர்கள் என்பதை ஒரு தாளில் எழுதுங்கள். இந்த பரிசை பல ஆண்டுகளானாலும் பொக்கிஷமாக வைத்திருப்பார்கள்.

### ஷாப்பிங் அழைத்து செல்லலாம்:

ஷாப்பிங் செய்வதை விரும்புகிறார்கள் என்றால், அவர்களை அழைத்துச் சென்று அவர்களுக்கு விருப்பமான பொருட்களை வாங்கிக் கொடுங்கள். விலை குறைந்த பொருளாக இருந்தாலும் தாயின் உள்ளம் சந்தோஷப்படும்.

### இனிப்பு வாங்கி கொடுக்கலாம்:

உங்கள் தாய்க்கு இனிப்புகள் பிடிக்கும் என்றால், அவர்கள் விரும்பி சாப்பிடும் இனிப்புப் பண்டங்களை சாப்பிட வைத்து மகிழ்விக்கலாம்.



**அன்பான இளம் வாலிபர்களே! உன் தகப்பனையும், தாயையும் கனம்பண்ணுவாயாக (மத். 19:19) என்ற வசனத்தின்படி இந்த அன்னையர் தினம் உங்கள் அன்னையரை கனம் பண்ண ஒரு வாய்ப்பு. அந்த நாளில் உங்கள் தாய் பிரியப்படுகிற காரியங்களை செய்து அவர்களை மகிழ்வியுங்கள். அன்று மட்டும் அன்பு செலுத்திவிட்டு அப்படியே விட்டு விடாமல் ஒவ்வொரு நாளும் அவரவர் தாய்க்கு செய்ய வேண்டிய கடமையை செய்யும்போது ஆண்டவர் உங்களை கனப்படுத்துவார்.**

அலசல்: கெத்சி கிளார்வின்

# உணர்வுகள்

## பயம்



வாலிபர்களாகிய நாம் இன்று மிகவும் போட்டி நிறைந்த உலகில் (Competitive World) வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நாளும் நாம் எதிர்கொள்ள பல சவால்கள் நமக்கு முன்பாக இருப்பது உண்மைதான். அச்சூழ்நிலைகளில் நம்முடைய உணர்ச்சிகளை நாம் பலவிதங்களில் வெளிப்படுத்துகிறோம். அதிலும் குறிப்பாக, பயம், தனிமை, கோபம், வெறுப்பு, மன அழுத்தம் போன்ற பல எதிர்மறையான உணர்வுகளை அனுபவிப்பவராய் இருந்தால் இந்தப் பகுதி உங்களுக்கே!

உணர்ச்சிகள் மனிதனை தனித்துவமாக்குகின்றன. ஏனென்றால், விலங்குகளுக்கோ மற்ற உயிரினங்களுக்கோ இது கொடுக்கப்படவில்லை. இத்தகைய விலைமதிப்பற்ற உணர்ச்சிகளை கையாள்வதில் நாம் கவனம் செலுத்துவது நல்லது. காரணம், நீங்கள் உங்களுடைய உணர்ச்சிகளை கட்டுக்குள் வைத்துக் கையாளாவிட்டால், உங்கள் உணர்ச்சிகள் உங்களைக் கட்டுப்படுத்தி, மனச்சோர்வு, தற்கொலை எண்ணங்கள், தாழ்வு மனப்பான்மை போன்றவற்றை கொண்டுவந்து, வெறுமையான நிம்மதியற்ற வாழ்க்கையையே உங்களுக்கு அளிக்கும்.

இதை வாசிக்கும் வாலிபனே! இன்று உன் உணர்ச்சிகளை புரிந்துக்கொண்டு, அவற்றை ஆவியானவரின் துணையோடு கையாள நீ ஆயத்தமா??? இம்மாதம் நாம் பார்க்கவிருக்கும் உணர்ச்சி – ‘‘பயம்’’




### பயத்தை கையாள்வது எப்படி?

பயம் என்ற சொல்லின் ஆங்கிலச் சொல்லான ‘‘FEAR’’-ன் விரிவாக்கம் கீழ்க்கண்டவாறு சொல்லப்படுகிறது.




இதற்கு உண்மை போன்ற பொய்காட்சி (மாயை) எனத் தமிழில் பொருளாகும். பிசாசு பொய்யனும், பொய்க்கு பிதாவாகவும் இருக்கிறான். வேதத்தை முழுவதும் பார்த்தால், கர்த்தர் தம் பிள்ளைகளிடம், ‘‘பயப்படாதே!’’ என்ற வார்த்தையையே மீண்டும் மீண்டும் சொல்கிறார்.

**இக்காலகட்டத்தில் வாலிபர்கள் பயப்படும் காரியங்கள் பல உள்ளன. அவற்றில் ஒருசில,**



Exam, Result, Interviews குறித்த பயம்



வேலை கிடைக்குமா அல்லது இருக்கும் இந்த வேலை நிலைக்குமா என்பதில் பயம்



எதிர்காலத்தைக் குறித்த பயம்



திருமணத்தைக் குறித்த பயம்



பெற்றோர் மற்றோரின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வேனா என்பதில் பயம்



நான் புறக்கணிக்கப் படுவேனோ என்பதில் பயம்

**இதுபோன்று பலவிதமான பயங்கள் உங்களை தினம் தினம் மேற்கொள்ளுகிறதா?**

சற்று நிதானமாய் சிந்தித்துப் பார்த்தல்! பயம் தேவனிடமிருந்து வருவதில்லை. பயம் சாத்தானி டமிருந்து மட்டுமே வருகிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அந்த சாத்தானை 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் வெற்றி சிறந்திருக்க, இன்று அந்த தோற்றுப்போன சத்துருவினால் கொடுக்கப்படும் இந்த பயத்தை உங்களால் மேற்கொள்ள முடியாதா?

**பயத்தை மேற்கொள்ள சில ஆலோசனைகள்:**

* நான் இந்த பயத்தில் இருந்து வெளிவர வேண்டும் என்று நீங்கள் முதலாவது விரும்ப வேண்டும்.

* கர்த்தரின் துணையோடு மாத்திரமே நான் இந்த பயத்திலிருந்து விடுதலை பெற முடியும் என்பதை முழு நிச்சயமாய் விசுவாசிக்க வேண்டும்.

* அதற்கு வேத வசனத்தோடு செய்யும் ஆழ்ந்த ஜெபத்தின் மூலம் நீங்கள் உங்கள் பயங்களை நிச்சயம் எதிர்கொள்ள முடியும்.

* பயம் உங்களை சூழுந்து கொள்ளும்போது, கீழேக் கொடுக்கப்பட்டுள்ள இந்த வசனங்களை மனதில் சொல்லி பயத்தின் ஆவியிலிருந்து வெளிவர முயற்சியுங்கள். கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வார் என்பதை முழு நிச்சயமாய் நம்புங்கள்.

**பயத்தை மேற்கொள்ள ஒரு சில வேத வசனங்கள்:**

* பயப்படாதிருங்கள்! நீங்கள் நம்பிக்கையுடன், வலுவாக, கலக்கமின்றி நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள் (யாத். 14:13).

* உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன் (ஏசாயா 41:13).

* அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே! என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள் (ரோமர் 8:15).

* தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2 தீமோ. 1:7).



**அன்பு வாலிபர்களே! கொரோனாவோடு வாழ புழகிக்கொள்ளுங்கள் என்று கூறியதைப் போல் இந்த கொடிய பயத்தோடு வாழ ஒருநாளும் புழகாதீர்கள். நம் தேவன் உங்களை எல்லா பயத்திலிருந்தும் விடுதலையாக்கவே விரும்புகிறார். நீங்கள் எடுக்கப்போகும் தீர்வு என்ன??**

# NEXT LEVEL

இளம் வாலிபர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். வாழ்க்கைப் பயணம் என்பது மிகவும் எளிதல்ல. அது ஒரு போர்க்களம். சாதாரணமாக Mobile Phone-ல் Game விளையாடினால் கூட அநேக levels கடந்து தான் வெற்றி அடைய முடியும். அதேபோலதான் நம்முடைய வாழ்க்கைப் பயணமும். நாம் கடக்கும் ஒவ்வொரு பாதையும் வெற்றிக்கு நேராக நம்மை அழைத்துச் செல்லும். ஆனால் அப்பாதைகளை கடக்க வேண்டுமென்றால், எதிர்வரக் கூடிய பிரச்சனைகள், தோல்விகள், ஏமாற்றங்கள் போன்றவற்றை கட்டாயம் எதிர்கொள்ள வேண்டும். அப்படி எல்லாவற்றையும் எதிர்கொண்டு வெற்றிக் கண்ட வெற்றியாளரின் வாழ்க்கைப் பயணம் உங்கள் முன்.




சாதனை: சுபா

உத்திரபிரதேச மாநிலத்தில் மிகவும் எளிமையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் (**Yashasvi Jaiswal**). இவர் சிறுவயதில் இருந்தே கிரிக்கெட் மீது அதிக ஈர்ப்பு கொண்டிருந்தார். எப்படியாவது கிரிக்கெட் பயிற்சி பெற்று பெரிய கிரிக்கெட் வீரராக வேண்டும் என்பதே இவரது கனவு. ஆனால் குடும்பத்தின் வறுமை காரணமாக இவரால் எந்த பயிற்சிக்கும் செல்ல முடியவில்லை. இவர் உட்பட வீட்டில் 6 பிள்ளைகள் என்பதால் படிப்பதே மிகவும் சிரமமாக இருந்தது. ஒருபக்கம் குடும்பத்தின் வறுமையான சூழ்நிலை, மறுபக்கம் கிரிக்கெட் மீது இவர் கொண்டிருந்த அதிக ஆர்வம்; என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பின சூழ்நிலையில் இருந்த ஜெய்ஸ்வால் தனது 10வது வயதில் தனது கிரிக்கெட் கனவைத் தொடர மும்பைச் சென்றார்.

மும்பையில் ஒரு பால் கடையில் தங்கி வேலை செய்துக் கொண்டே கிரிக்கெட் பயிற்சியும் மேற்கொண்டார். கடுமையான பயிற்சியினிமித்தம், கடையில் அதிக நேரம் வேலை செய்ய முடியாமல் போனதால், ஒரு சில நாட்களிலேய, அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். எங்கு செல்வது? என்ன செய்வது? என்று தெரியாமல் சாலையில் அலைந்து திரிந்த ஜெய்ஸ்வால், மும்பையில் உள்ள ஆசாத் மைதானத்தில் உள்ள கூடாரத்தில் தங்கினார். தன்னுடைய வாழ்வாதாரத்திற்கு **Part time**ஆக பானிபூரி விற்பனை செய்து வந்தார். மூன்று வருடங்கள் இதே மைதானத்தில் தங்கி கிரிக்கெட் பயிற்சியை மேற்கொண்டார். ஒருபுறம், வாழ்க்கையை நடத்த போராடிக் கொண்டிருந்த ஜெய்ஸ்வால், மறுபுறம், அவருடைய திறமையை எவ்வாறு வாய்ப்பாக மாற்றுவது என்றறியாமல் தவித்தார். கிரிக்கெட் வீரராக வேண்டும் என்ற நம்பிக்கையில் தினமும் ஆசாத் மைதானத்திற்கு நூற்றுக்கணக்கான குழந்தைகள் விளையாட வருவார்கள். அத்தனை பெரிய கூட்டத்தில் தனித்து நிற்பது எளிதல்ல.

ஒருநாள், மும்பையில் கிரிக்கெட் அகாடமியை நடத்தி வந்த ஜுவாலா சிங் ஜெய்ஸ்வாலின் திறமையைக் கண்டு வியந்து, அவருக்கு பயிற்சி அளிப்பது மட்டுமல்லாமல், அவருக்கு உணவு மற்றும் தங்குவதற்கு இட வசதியும் அளிக்க முடிவு செய்தார். ஜெய்ஸ்வால் தன்னுடைய திறமையை இங்கு நன்றாக பட்டைத்



தீட்டினார். மும்பையில் நடந்த பள்ளி அளவிலான போட்டிகளில் ஒன்றான கைல்ஸ் ஷீல்டு (Giles Shield) போட்டியில் வியக்க வைக்கும் வகையில் 319 ரன்கள் எடுத்து 13/99 விக்கெட்டுகளை வீழ்த்தியதே ஜெய்ஸ்வாலின் வெற்றிக்கான முதல் படியாகும். இந்த சாதனை லிம்கா புக் ஆஃப் ரெக்காட்ஸ்-ல் (Limca Book of Records) இடம் பெற்றது. பின்னர் மும்பை U-16 மற்றும் U-19 அணிகளுக்காக விளையாடத் துவங்கினார். 2018ல் இந்திய U-19 அணியில் அவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இது வழிவகுத்தது.

2020ஆம் ஆண்டு நடைபெற்ற under-19 உலகக் கோப்பைத் தொடரில் விளையாடி அதிக ரன்கள் எடுத்து போட்டியின் ஆட்டநாயகன் விருதை வென்று அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். பிறகு ஐ.பி.எல் (IPL) தொடரில் விளையாடும் வாய்ப்பும் கிடைத்தது. டெஸ்ட் வரலாற்றில் ஒரு தொடரில் 20 சிக்ஸர்கள் அடித்த முதல் வீரர் ஜெய்ஸ்வால் ஆவார். சுனில் கவாஸ்கருக்குப் பிறகு, 22 வயதில் ஒரு டெஸ்ட் தொடரில் 500 ரன்களை எடுத்த இரண்டாவது இந்தியரும் இவரே. இவ்வாறு தனக்கு கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் மிகவும் நேர்த்தியாக பயன்படுத்தி அடுத்தடுத்த Levelக்கு சென்று இன்று நாம் பார்த்து வியக்கும் திறமையான கிரிக்கெட் வீரராக இருக்கின்றார்.

இதை வாசிக்கும் இளம் சாதனையாளர்களே, யஷஸ்வி ஜெய்ஸ்வால் தனக்கு எதிராக மலைபோல் இருந்த வறுமையை போராடி மேற்கொண்டு, எண்ணற்றத் தடைகளைத் துணிச்சலாய் கடந்து, தன்னுடைய திறமையினால் வாய்ப்புகளை ஈர்த்து, தன் கிரிக்கெட் கனவை நிறைவேற்றிக் காட்டியுள்ளார். நாமும் நமது கனவை நினைவாக்க வேண்டுமென்றால் அடுத்தடுத்த level-க்கு சென்றுக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி கடக்கும் போது மிகவும் கடினமாகத் தான் இருக்கும். ஆனால் சோர்ந்துப் போகாமல் முன்னேறிக் கொண்டே இருப்போமானால் வெற்றி நிச்சயம். Next level-க்கு செல்ல தயாராக இருக்கிறீர்களா?

**Believe in yourself and you will be unstoppable.**

# போர்க்குதிரை



**விநோதமாய் அடிவைத்து நடக்கிறவைகள் மூன்றுண்டு... மிருகங்களில் சவுரியமானதும் ஒன்றுக்கும் பின்னிடையாததுமாகிய சிங்கமும்,போர்க்குதிரையும்... நீதி. 30:29-31**

குதிரைகள் பெரும்பாலும் நின்றுகொண்டே தூங்கும். இரவு நேரங்களில் கூர்மையாக கவனிக்கும் தன்மையுடையது. இரண்டு கண்களில் இரு வேறு காரியங்களைக் கவனிக்கும் சிறப்பு தன்மைக் கொண்டது. தினமும் 3-4 மணி நேரம் மட்டுமே இளைப்பாறும். ஒரு குதிரை சுமார் 2 டன் எடையை இழுத்து செல்லும். ஆனால் 2 குதிரைகள் 22 டன் எடையை இழுத்து செல்லும் தன்மை கொண்டது. கண்கள் மனிதக் கண்களைவிட 9 மடங்கு பெரியது. ஒருநாள் 25 காலன்கள் (94 லிட்டர்) தண்ணீரைப் பருகும்.

## குதிரைகள் கற்றுத்தரும் பாடங்கள்:

**குதிரைகள் கடினமான சூழ்நிலையை எதிர்கொள்ளும் திறன் கொண்டவை. எதற்கும் பின்வாங்காது. எதையும் எதிர்கொள்ளும் தைரியம், விழிப்புடன் செயல்படுவது, உன்னதமான நடைகள் இவையெல்லாம் குதிரைகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை.**

# ஜெபக்கையேடு

## மே 2024

ஜெபம்: ஜெனிட்டா






## நீர் நிலைகள்


நாட்டில் 24,24,250 நீர்நிலைகள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றில் 97.1% கிராமப்புறங்களிலும், 2.9% நகர்ப்புறங்களிலும் உள்ளன. நாட்டின் மொத்த நீர்நிலைகளில் மேற்கு வங்காளம், உத்திரபிரதேசம், ஆந்திர பிரதேசம், ஒடிசா, அசாம் மாநிலங்களில் அதிக எண்ணிக்கையில் நீர்நிலைகள் உள்ளன. இந்தியாவில் 2080-க்குள் நிலத்தடி நீர்மட்டம் கடுமையாக குறையும் என்று ஆய்வில் வெளியாகியுள்ளது. நிலத்தடி நீர் குறைந்து போவது, இந்தியாவின் 143 கோடி மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினரின் வாழ்வாதாரத்திற்கு ஆபத்தாக அமையும்.

### ஜெபக்குறிப்புகள்

1. இந்தியாவில் குளங்கள், கண்மாய்கள், ஏரிகள் என 24.24 லட்சம் நீர்நிலைகளிலிருந்தும் நீர் தடையில்லாமல் கிடைக்க ஜெபியுங்கள்.
2. கோடை வெப்பம் அதிகரிப்பினால் வெயிலினால் தாக்கப்பட்டு எந்த பாதிப்புகளும் வராதபடி ஜனங்கள் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.
3. குடி தண்ணீர் தடையில்லாமல் கிடைக்க ஜெபியுங்கள்.
4. நீர்நிலைகள் புதுப்பிக்கப்பட, சீரமைக்கப்பட ஜெபியுங்கள்.







## வெயிலின் தாக்கம்

இந்தியா மட்டுமல்லாது உலகளவில் முக்கிய பிரச்சனையாக இருப்பது உலக வெப்பமயமாதல். இந்தியாவில் கடந்த 123 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 2வது முறையாக 2023ஆம் ஆண்டில் தான் வெப்பநிலை அதிகரித்துள்ளது. இந்த வருடமும் (2024) வெப்பநிலை அதிகரிக்கும் எனக் கூறப்படுகிறது. இந்தக் காலநிலை மாற்றத்தின் காரணமாக 2023ல் மட்டும் 2,376 பேர் உயிரிழந்துள்ளனர். 2027ஆம் ஆண்டிற்குள் தற்போது நிலவும் பூமியின் சராசரி வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ்க்கு மேல் உயர்ந்து 66% உயர வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

### ஜெபக்குறிப்புகள்

1. இந்த வருடம் வெயிலின் தாக்கம் குறைக்கப்படவும், காலநிலையில் ஒரு மாற்றம் உண்டாகவும் ஜெபியுங்கள்.

2. வெயிலினால் எந்த மரணங்களும் சம்பவிக்காதபடி தேவன் பாதுகாத்துக் கொள்ள ஜெபியுங்கள்.

3. வெயிலின் தாக்கத்தினால் வியாதிகள், கிருமி தொற்றுகள் தாக்காதபடி தேவ ஆளுகை உண்டாக ஜெபியுங்கள்.

4. வெயிலின் தாக்கத்தினால் விவசாயம் பாதிக்காதபடி தேவன் ஆசீர்வாதமான மழையை கொடுக்க ஜெபியுங்கள்.



# மாணவர் தற்கொலை

2021ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 13,000 மாணவர்கள் தற்கொலை செய்துள்ளனர். (அதாவது தினசரி 35 தற்கொலைகள்). இந்தியாவில் மாணவர்கள் தற்கொலை அதிகமாக நடைபெறும் மாநிலங்களில் மகாராஷ்டிரா முதலிடமும், மத்திய பிரதேசம் 2ம் இடமும், தமிழகம் 3ம் இடமும் வகிக்கிறது. 2017ஆம் ஆண்டில் 4711 மாணவ மாணவியர் தற்கொலை செய்துள்ளனர். ஆனால் 2021ஆம் ஆண்டில் இது 5693 ஆக உயர்ந்துள்ளது. கல்வித்துறை அமைச்சகத்தின் அறிக்கையின்படி *I.I.T, N.I.T* போன்ற மத்திய கல்வி நிறுவனங்களில் 122 பேர் தற்கொலையினால் மரித்துள்ளனர்.

ஜெபக்குறிப்புகள்

1. தற்கொலை எண்ணத்தோடு இருக்கும் மாணவ மாணவிகள் விடுதலையாக்கப்பட ஜெபியுங்கள்.

2. மாணவ மாணவிகளை தற்கொலைக்கு தூண்டுகிற தற்கொலையின் ஆவி கட்டப்பட ஜெபியுங்கள்.

3. தேர்வு முடிவுக்காக காத்திருக்கும் மாணவ மாணவியர் எந்த தவறான முடிவுகளும் எடுக்காதபடி தேவன் பாதுகாத்துக் கொள்ள ஜெபியுங்கள்.

4. பள்ளிப் படிப்பை தொடர்ந்து படிக்க முடியாமல் தவறான முடிவுகள் எடுக்காதபடி மாணவர்கள் மேல் தேவ ஆளுகை உண்டாக ஜெபியுங்கள்.



# பள்ளிக் கல்வித்துறை

இந்தியாவில் 14,89,115 பள்ளிகளும், 97 இலட்சத்திற்கும் அதிகமான ஆசிரியர்களும், 26.5 கோடிக்கும் அதிகமான மாணவர்களும் உள்ளனர். பள்ளிகள் திறக்கப்படும் நிலையில் பள்ளிக்கு வராத மாணவ மாணவியர்களை கண்டறிந்து பள்ளிகளில் சேர்க்க பள்ளிக் கல்வித்துறை திட்டங்களை கொண்டு வருகிறது. பள்ளிக் கட்டணம் கட்ட முடியாததால், சம்பாதிக்க வேண்டிய கட்டாயம், உடல் நலப்பிரச்சனை போன்றவற்றால் இடை நிற்கும் மாணவ மாணவியர்கள் பள்ளியில் சேர்க்க அரசு தனிக்கவனம் செலுத்த பள்ளிக் கல்வித்துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஜெபக்குறிப்புகள்

1. இந்தியாவில் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்.

2. பள்ளிக்கு செல்லாமல் இருக்கிற மாணவர்களின் காரணங்களை கண்டறிந்து மறுபடியும் பள்ளிகளில் சேர்ந்து படிக்க வாய்ப்புகளை அரசாங்கம் உருவாக்கிக் கொடுக்க ஜெபியுங்கள்.

3. குடும்ப வறுமை காரணமாக பள்ளிக் கட்டணம் செலுத்த முடியாமல் பள்ளிக்கு செல்லாத மாணவர்களை கண்டறிந்து அரசு உதவி தொகை கொடுத்து படிப்பைத் தொடர ஜெபியுங்கள்.

4. மாணவ, மாணவியர்களுக்கு தேவ ஞானம் உண்டாகவும், அவர்கள் படிப்பில் கவனம் செலுத்தவும் ஜெபியுங்கள்.


எச்சரிப்பின் செய்தி: டேவிட்

# நைசா நரகம்!

பகுதி - 4

**Hello Friends, நம்மை நரகத்திற்கு கொண்டு போக பிசாசு பயன்படுத்தும் தந்திரம் பாவம். அதில் ஒரு தந்திரமாகிய பொருளாசையைக் குறித்து கடந்த மாதம் தெளிவாக அறிந்துக் கொண்டோம். இந்த மாதத்தில் சாத்தான் பயன்படுத்துகிற வேறொரு தந்திரமாகிய பொய்யைக் குறித்து நாம் தெரிந்து கொள்ளப் போகிறோம்**

## பொய்



ஒருவரை ஏமாற்றுவதற்காக அல்லது தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக உண்மை நிலையை மாற்றி சொல்வது பொய். 'அட, பொய்க்கெல்லாம் **Definition**, தேவையா? பொய் அப்படினு சொன்னாலே எங்களுக்கு தெரியாதா, எங்க **Lifeல** எவ்வளவு பொய் சொல்லிருப்போம்' என்று நினைக்கிறீங்களா? உண்மையை மாற்றி சொல்வது மட்டும் பொய் கிடையாது, உண்மையை மறைப்பதும் பொய்தான். ஆபேலை கொலை செய்த காயீனிடம் உன் சகோதரன் எங்கே என்று தேவன் கேட்டபோது, எனக்கு தெரியாது என்று உண்மையை மறைத்து காயீன் பொய் சொன்னான் (ஆதி. 4:9).

நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த சமுதாயத்தில் பொய்யை ஒரு பாவமாகவே யாரும் நினைப்பதில்லை. பொய் சொல்வதெல்லாம் ஒரு பாவமா, 'ஆயிரம் பொய் சொல்லியாச்சும் ஒரு கல்யாணத்தை நடத்தலாம்னு சொல்வாங்களே, அப்போ ஒரு நல்லது நடக்க பொய் சொல்வது தப்பில்லையே' என்று தாங்கள் சொல்கிற பொய்யை நியாயப்படுத்துகிறவர்கள் பலரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்த காலத்தில் சிறுபிள்ளைகள் முதல் முதியவர்கள் வரை வயது வரம்பின்றி அனைவரும் பொய் சொல்லுகிறார்கள். செய்யக் கூடாது என்று சொன்னதை ''செய்தாயா'' என்று அம்மா கேட்கும்போது, அம்மாவுக்கு பயந்து சிறுபிள்ளை பொய் சொல்கிறது. பள்ளியில் படிக்கும் மாணவர்கள் **Homework** செய்யாமல் **Teacher** கேட்கும்போது அடிக்கு பயந்து ''எனக்கு தலைவலி, வயிற்று வலி'' என்று பொய் சொல்லுகிறார்கள். **Collegeல** படிக்கும் வாலிபர்கள் பொய் சொல்லி **Class cut** அடித்து **Beach, Park, Theatre** போகிறார்கள். வேலைக்கு செல்பவர்கள் **officeக்கு** ஏன் **Late** என்று **Manager** கேட்கும்போது, **Train/Bus late** அல்லது **Traffic** என்று பொய் சொல்கிறார்கள். அநேக வாலிபர்கள் தங்கள் பெற்றோர்களிடம், 'நண்பர்கள்கூட வெளியே போகிறேன் அல்லது **Group study** பண்ண போகிறேன்' என்று பொய் சொல்லிவிட்டு தங்கள் காதலன் அல்லது காதலியை சந்திக்கச் செல்கிறார்கள். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்கள் அவங்க **Business** முன்னேற அல்லது அதிக பணம் சம்பாதிக்க **customerரிடம்** பொய் சொல்கிறார்கள். **Advocates** தாங்கள் எடுத்த வழக்கில் வெற்றி பெற பொய் சாட்சிகளை நிறுத்துகிறார்கள். சிலர் மற்றவர்களை சந்தோஷப்படுத்த பொய் பேசுவார்கள். சிலர் பெருமைக்காக பொய் பேசுவார்கள். இப்படி அநேக காரியத்தை சொல்லிக் கொண்டே போகலாம்.

### பொய்யைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது?

லேவி. 19:11 மற்றும் கொலோ 3:9ல், **"ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்"** என்றும், எபே. 4:25ல், 'அவனவன் பிறனோடு மெய்யை பேசக்கடவன்' என்றும் வேதம் ஆலோசனை கூறுகிறது. அதுமட்டுமல்ல, தேவன் கொடுத்த 10 கட்டளைகளில் ஒரு கட்டளை பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக (யாத். 20:16; உபா. 5:20) என்பதாகும். மனுஷனுடைய இருதயத்திலிருந்து புறப்படுகிற பொய் சாட்சி அவனை தீட்டுப்படுத்தும் என்று வேதம் சொல்கிறது (மத். 15:19,20). பொய் ஒரு மனுஷனை தீட்டுப்படுத்தும். பொய் சொல்கிறவன் நாசமடைவான் (நீதி. 19:9). பாருங்கள், எலிசா வெகுமதியை வாங்கி வர சொன்னாரென்று கேயாசி நாகமானிடம் பொய் சொல்லி

வெகுமதியை வாங்கிவிட்டு, பின்பு ‘‘எங்கே இருந்து வந்தாய்’’ என்று எலிசா கேட்டதற்கு ‘‘நான் எங்கும் போகவில்லை’’ என்று பொய் சொன்னதன் விளைவாக குஷ்டரோகியாய் மாறினான் (2 இராஜா. 5:25). அனனியா, சப்பீராள் பரிசுத்த ஆவியானவரிடம் பொய் சொல்லி செத்து போனார்கள் (அப். 5:4,5). பொய் பேசுகிறவனுக்கு நிச்சயம் தண்டனை உண்டு (நீதி. 19:5).

## நாம் பொய் சொல்லக்கூடாது என்று தேவன் ஏன் கட்டளையிடுகிறார்?

கர்த்தர் வெறுக்கிற, அருவருக்கிற காரியம் பொய் நாவு, பொய் உதடு (நீதி. 6:16-19; 12:22). நம் தேவன் எவ்வளவேனும் பொய்யுரையாதவர் (எபி. 6:18; தீத்து 1:13). பொய் சொல்வதற்கு அவர் மனிதன் கிடையாது (எண். 23:19). அவர் பரிசுத்தமுள்ளவர். பொய்யை வெறுக்கிறவர். அவரைப் போலவே நாமும் பொய்யுரையாதவர்களாய் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

## யாரெல்லாம் பொய்யர்கள்?

பொய் சொல்பவர்கள் மட்டும் பொய்யர்கள் கிடையாது.

- **இயேசுவை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான் (1 யோவான் 2:4).**

- **இயேசுவை கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவன் பொய்யன் (1 யோவான் 2:22). நம் தேசத்தில் ஒரு கூட்டம் யெகோவா தேவனை மட்டும் தான் கடவுளாக ஏற்றுக் கொள்வார்கள். இயேசுவை கடவுளாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் பொய்யர்கள் என்று வேதம் சொல்கிறது.**

- **மதவாதிகளிடம் சிக்கி உயிருக்கு பயந்து இயேசுவை கடவுள் அல்ல என்று மறுதலிக்கிறவர்களும் பொய்யர்களே.**

- **தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன் (1 யோவான் 4:20). சிலர் இரட்சிக்கப்பட்டு, அபிஷேகம் பெற்று, அந்நிய பாஷை கூட பேசுவார்கள். பக்தியாய் சபைக்கு வந்து ஆராதனை செய்வார்கள். ஆனால் சுற்றி இருக்கிறவர்களிடம் அன்பு காட்டமாட்டார்கள், அப்படிப்பட்டவர்கள் பொய்யர்கள் என்று வேதம் சொல்கிறது.**

இப்படிப்பட்ட பொய்யர்கள் நரக ஆக்கினைக்கு பாத்திரவான்களாய் இருக்கிறார்கள்.

## சரி, இந்த பொய் என்கிற பாவம் யாரிடமிருந்து வந்தது?



இவ்வுலகில் முதன்முதலில் பொய் பேசியது யார் தெரியுமா? ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஆண்டவர், ‘‘நன்மை தீமை அறியத்தக்க கனியை புசிக்க வேண்டாம், அதை நீங்கள் புசிக்கும் நாளில் சாகவே சாவீர்கள்’’ என்று கட்டளையிட்டார். ஆனால் சர்ப்பமாகிய பிசாசு ஏவாளிடம் வந்து ‘‘நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள்’’ என்று தந்திரமாகப் பொய் சொல்லி அவர்களை அந்தக் கனியைப் புசிக்கச்செய்து பாவத்தில் தள்ளி, சாகா வரம் பெற்றிருந்த மனிதர்களை சாகும்படிச் செய்தான்.

‘பிசாசு பொய்யனும், பொய்க்கு பிதாவுமாக இருக்கிறான் (யோவான் 8:44). யாரெல்லாம் பொய் சொல்கிறார்களோ அவர்களெல்லாரும் சாத்தானுடைய கூட்டத்தார்கள் என்று வேதம் சொல்கிறது (வெளி. 3:9). பொய் என்கிற பாவம் இந்த உலகத்தில் வாழும் போது மட்டும் நமக்கு பாதிப்பை கொண்டு வராது. நாம் மரித்தபிறகும் நம் ஆத்துமாவை நரகத்திற்கு கொண்டு போக வல்லமையுள்ளது. பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி. 21:8). அதுமட்டுமல்ல, தேவனால் அலங்கரிக்கப்பட்ட புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்திற்குள் பிரவேசிக்க முடியாது. பொய்யை விரும்பி அதன்படி செய்கிற யாவரும் நகரத்திற்கு புறம்பே இருப்பார்கள் (வெளி. 22:15).

இதை வாசிக்கும் வாலிப சகோதர, சகோதரிகளே! பிசாசானவன் பொய் என்கிற பாவத்தை செய்ய வைத்து நைசாக நம்மை நரகத்திற்கு கொண்டு போக தீவிரமாக செயல்படுகிறான். இந்த பொய் என்கிற பாவம் நம் அன்றாட வாழ்க்கையில் சகஜமாய் நடப்பதால், இதை நாம் பெரிய பாவமாக நினைப்பதில்லை. பொய் ஒரு பாவம் என்று உணர்ந்து மனந்திரும்பி நரக ஆக்கினைக்கு தப்பித்து கொள்ளுங்கள்.

**அடுத்த மாதம் நரகத்திற்கேதுவான வேறொரு பாவத்தைக் குறித்து நாம் தெரிந்துக் கொள்ளலாம்.**

# Revival IGNiTERS

## Monthly Fellowship

*Igniters Youth Fellowship is a place where young people ignite their spiritual lives, discover the profound truths of the Bible, and find strength in praying for the country as a group. You are welcome to join in on this fellowship and grow stronger. Come on! Strengthen yourself, and get ready to fortify others!*

## EVERY 1st SUNDAY (5th May)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
Jehovah Jireh
Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj College Rd. 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

## EVERY 2nd SATURDAY (11th May)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road, Railway Line, Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road,Madurai - 18
9750955548 | 9344759316

## EVERY 2nd SUNDAY (12th May)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MUMBAI - BHANDUP (4PM – 6:30PM)**
Bright High School, Village Road,
Bhandup (W), Mumbai – 400078
9004882470

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School Mela Sathankulam.
9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3rd SUNDAY (19th May)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High
Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via) Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service,
Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre,VK Road.
9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
Kamlambal Street,
Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4th SATURDAY (25th May)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex,
71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (26th May)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky,
Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

Jesus Redeems
**Youth World**
Televison Program

In Sathiyam TV
Every Saturday
6:30 AM

Watch it on
YouTube and Comforter TV
at 7:00 AM

Dear youngsters introduce this TV programme to your friends and share to us the blessings that you have received through this to the number given below.
9750955547




ON SUNDAY 26th May
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

தகவல்: காட்வின்

TECH - 4

# கைபேசியை கையாளு!

Pick up the phone




## Hello நண்பர்களே...!

கைபேசியை கையளு என்ற கட்டுரை மூலம் உங்களை மீண்டும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. ஒவ்வொரு மாதமும் கைபேசியை நாம் கையாளுவது எப்படி என்பதைக் குறித்து நீங்கள் அறிந்து வருகிறீர்கள். இந்த மாதமும் உங்களுக்கு உபயோகமான ஒரு பகுதியைக் குறித்து இக்கட்டுரையில் காணலாம்.


ஒரு பரபரப்பான வேகமான உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த பரபரப்பான சூழ்நிலையில் மனிதனுக்கு மறதி அதிகம் ஏற்படும். அபேற்பட்ட சூழ்நிலைகளில் நாம் மறக்கும் காரியங்களை எழுதி வைத்துக் கொள்வோம். சில வேளைகளில் எழுதி வைத்த டைரியையோ அல்லது துண்டுச்சீட்டையோ தொலைத்து விடும் சூழ்நிலையில் செய்வதறியாது திகைப்போம். அந்தமாதிரியான சூழ்நிலைகளில் நமக்கு உதவும் சில மொபைல் **features**களை குறித்து இந்த மாதம் நாம் காணலாம்.

**Notes app** மூலம் நாம் நினைவில் வைக்க வேண்டியவைகளை அதில் குறித்து வைத்துக்கொள்ளலாம். சில பேர் தங்கள் மொபைலில் இதுபோன்ற வசதிகள் இருக்கிறது என்பதைக் கூட அறியாமல் இருக்கிறார்கள். பொதுவாக எல்லா மொபைல்களிலும் **notes** என்ற செயலி **default** ஆக இருக்கும்.




அதில் அன்றாடம் செய்யும் பணிகளை குறிப்புகளாக எழுதலாம். குறிப்புகள் எழுதும் போதே அது சம்பந்தப்பட்ட புகைப்படங்களையும் இணைத்துக் கொள்ளலாம். **Check box** எனப்படும் **tool** மூலம் செய்து முடிக்க வேண்டிய காரியங்களை பட்டியலிட்டு, செய்து முடித்த உடன் **tick** செய்து வேலையை மறக்காமல் செய்யலாம். சில **notes** செயலிகள் **stick notes** என்னும் வசதியையும் கொண்டு இருக்கும். இதை உபயோகப்படுத்துவதன் மூலம் கைபேசியின் **home screen**ல் முக்கியமான காரியங்களை எழுதி வைக்கலாம். ஆனால் கைபேசியில் எழுதி வைத்தால் சில முக்கியமான நேரங்களில் சார்ஜ் இல்லாமல் போய்விடும், சிலவேளைகளில் பழைய கைபேசியை மாற்றக்கூடிய நிலை உண்டாகும்போது, கைபேசியில் எழுதினது வீணாகிறது என்ற மனநிலை உங்களுக்கு உண்டாகலாம். அதுபோன்ற சூழ்நிலையில் உதவுவதற்கு தான் நாம் **cloud storage** எனப்படும் முறையை உபயோகப்படுத்த வேண்டும்.

அது என்ன **cloud storage** என்று கேட்கிறீர்களா? நாம் தரும் தரவுகளை **Internet** மூலம் பதிவேற்றம் செய்து அந்தந்த நிறுவனங்களின் sever எனப்படும் நினைவகத்தில் இருக்கும். வேண்டும் என்கிற நேரத்தில் நாம் எங்கு இருந்தாலும், எந்த கணினி பயன்படுத்தினாலும் அங்கு நம்முடைய **email id log in** செய்தாலே, உங்களுக்கு தேவையான தரவுகளை எந்த இடத்தில் இருந்தாலும் அங்கேயே பெற்றுக் கொள்ளலாம் .




சரி **notes** செயலிக்கு அப்படி ஒரு வசதி உண்டா என நீங்கள் கேட்டால் அதன் விடை ஆம் என்பதே.. **google notes (keep notes)** என்னும் செயலியை நாம் பதிவிறக்கி அதில் நம்முடைய தரவுகளை எழுதி வைத்துக் கொண்டால் எங்கு, எப்போது வேண்டுமானாலும் நாம் எடுத்துக் கொள்ளலாம். நீங்கள் கைபேசியை மாற்றினால் கூட புதிய கைபேசியிலும் நம்முடைய **email id login** செய்தாலே அனைத்து தரவுகளும் அங்கு இருக்கும். இதன் மூலம் நீங்கள் உங்கள் வாழ்வில் அடிக்கடி ஏற்படும் மறதியிலிருந்தும், அதினால் ஏற்படும் பின்விளைவுகளிலிருந்தும் தப்பிக்கலாம்.

வாலிபர்களாகிய நம் வாழ்வில் இதேபோல் அநேக காரியங்கள் நாம் மறக்காமல் வைக்க கர்த்தர் நமக்கு ஞாபக சக்தியை கொடுத்து உள்ளார். நீதிமொழிகள் 7:1-3 வசனங்களில் ‘‘வார்த்தையாகிய வசனத்தை இருதயத்தில் எழுதிக்கொள்’’ என்று கூறப்பட்டுள்ளது. அதின் அர்த்தம் இந்த வாலிப வயதிலேயே வேத வசனங்களை நாம் இருதயத்தில் கட்டாயம் பதித்து வைக்க வேண்டும்.

இயேசு 40 நாட்கள் உபவாசித்த பின்பு, சாத்தானால் சோதிக்கப்பட்ட போது வசனமாகிய ஆவியின் பட்டயத்தினாலேயே பிசாசை எதிர்த்தார். காரணம் லூக்கா எழுதின சுவிசேஷம் இரண்டாம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து எருசலேம் தேவாலயத்தில் போதகர்கள் நடுவில் உட்கார்ந்து அவர்களை வினவினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலம் சிறுவயதிலேயே வேத வசனங்களை அறிந்தவராய் நமக்கு மாதிரியை வைத்து வைத்துள்ளார் என்பது புலப்படுகிறது. எனவே நாமும் வேத வசனங்களை இருதயமாகிய பலகையில் எழுதி பிசாசை மேற்கொள்ளும் வல்லமையை பெற்றுகொள்வோம்.

மீண்டும் இதேபோல் வேறு ஒரு **TECH** தகவலுடன் உங்களை சந்திக்கிறேன்...

# கொளுத்தும் கோடையை சமாளிக்க..!



வழக்கமாக ஏப்ரல், மே மாதங்களில் வெயில் கொளுத்தி எடுக்கும். ஆனால் இந்த ஆண்டு மார்ச் மாதத்திலேயே வெயில் கொளுத்தி எடுக்கத் தொடங்கிவிட்டது. சுட்டெரிக்கும் கோடை வெயிலால் உடலில் நீர்ச்சத்துக் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் எடுத்துக் கொள்ளும் பானங்கள் நம் தாகத்தை தணிப்பதோடு மட்டுமல்லாமல் உடல் உஷ்ணத்தை கட்டுப்படுத்தி குளிர்ச்சி தருவதாகவும் அமைய வேண்டும்.



வெயில் காலத்தில் பானமாகவோ, உணவு மூலமாகவோ கட்டாயமாக எடுத்துக் கொள்ள வேண்டியது மோர் ஆகும். நம் உடலுக்கு குளிர்ச்சி தருவதோடு, செரிமானக் கட்டமைப்பை மேம்படுத்துகிறது. உணவுக்குப் பிறகு ஒரு டம்ளர் மோர் அருந்துவது நல்ல பலனை தரும்.



கரும்பு, இஞ்சி, எலுமிச்சை எல்லாவற்றையும் சேர்த்த அரைத்து, புதினா சேர்த்த இயற்கையான இனிப்பு சுவை கொண்ட இந்த பானத்தில் நார்ச்சத்து மிகுதியாக உள்ளது. ஐஸ் சேர்க்காமல் பருகுவது நல்லது.



சிவந்த நிறம் கொண்ட தர்பூசணி தாகத்தை தீர்ப்பதோடு, எண்ணற்ற ஊட்டச்சத்துக்களை கொண்டிருக்கிறது.

தகவல்: காலேப்



# இரயில் பயணம்

## சென்னை நுங்கம்பாக்கம் இரயில் நிலையம்...

**தாம்பரத்திலிருந்து - பீச் வரை செல்லும் இரயிலில் வேலை முடித்து வீடு திரும்பி கொண்டிருந்த விக்கி களைப்பாக தூங்கிக் கொண்டிருக்கும் போது, திடீரென ஆண்ட்ரு தட்டி எழுப்பினான்.**



**ஆண்ட்ரு:** Hi டா விக்கி... இவளோ சத்தத்திலயும் உன்னால தான் பெட் ரூம்ல தூங்கற மாதிரி train-லயும் தூங்க முடியும்... வேற லெவல் போ...

**விக்கி:** ஆமா டா! இரண்டு நாளா வேலை அதிகம்... இன்னைக்கு தான் எல்லாம் முடிந்தது... சரி நீ எப்பவும் 6:15 train-ல போய்டுவ... இன்னைக்கு என்ன லேட்?

**ஆண்ட்ரு:** எனக்கும் அதே தான்... இன்னைக்கு வேலை கொஞ்சம் அதிகம்... எப்படி முடிக்க போறேனு தெரியல... Prayer தான் பண்ணணும்.



**விக்கி:** பேசாம நாம இரண்டு பேரும் அமெரிக்கா போய் நம்ம மூளையில சிப் வச்சிர வேண்டியது தான்.

**ஆண்ட்ரு:** எத சொல்லுற... இலான் மஸ்க் நிறுவனம் கண்டுபிடிச்ச N1 சிப் ஆ?


**விக்கி:** அதே தான், அந்த சிப் மட்டும் பொருத்திட்டோம்னா இந்த வேலையை செய்யணும்னு நாம யோசிச்சா மட்டும் போதும்; கம்ப்யூட்டரே எல்லா வேலையும் செஞ்சு முடிச்சிருமாம்.!

**ஆண்ட்ரு:** நானும் கேள்விப்பட்டேன், ஆச்சரியமா தான் இருக்கு. இன்னும் சில ஆண்டுகளில் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்த ஆரம்பிச்சிருவாங்க போல தெரிகிறது.

**விக்கி (பிரம்மிப்போடு):** யோசிச்சுப்பாரு எல்லா வேலையும் சுலபமாக செய்துவிடலாம்.

**ஆண்ட்ரு:** ஒரு பக்கம் நல்லது மாதிரி தான் தெரியுது... ஆனா எல்லா தொழில் நுட்பத்திற்கும் இரண்டு பக்கங்கள் இருக்கும். ஆச்சரியம் இருந்தா ஆபத்தும் இருக்கும்.

**விக்கி:** ஊனமுற்றவர்கள், கண், செவி மற்றும் பேசும் திறன் இல்லாதவர்களுக்கு இது மிகவும் பிரயோஜனமாக இருக்கும்னு சொல்றாங்க. அதுமட்டுமல்லாம சரீரத்தில் என்ன பிரச்சனை வந்தாலும் இது உடனே




கண்டுபிடித்து விடும்ன்னு இப்படி அநேக நன்மைகளை அடுக்கிக் கொண்டே போறாங்க.

**ஆண்ட்ரு:** இதை பொருத்துவதற்கும் நேரம் அதிகம் எடுத்துகொள்ளாதாம். காலையில் போனால் மதியம் சிப் பொருத்திக் கொண்டு வந்துவிடலாம் என்கிறார்கள். கைபேசியில் 'play store' மூலம் அதற்கான செயலியை download செய்து Bluetooth மூலம் சிப்-ஐ இணைத்து விடலாம். வருங்காலத்தில் இதை இன்னும் மேம்படுத்தி கணினியுடன் இணைத்துக் கொண்டால் Googleல் போய் எதையும் தேட வேண்டியதில்லை. எந்த காரியத்தைக் குறித்து தெரிந்து கொள்ள வேண்டுமோ, அதை யோசிச்சாலே போதுமாம் அதைப் பற்றின அத்தனை தகவல்களும் சிப் மூலமாக நேரடியாக நம் மூளைக்கு சென்று சேர்ந்துவிடும். ஆனால் இதில் சில சிக்கல்களும் இருக்கு.

**விக்கி:** ஹுக்கும்.... என்னடா இவ்வளோ பாசிடிவா பேசுறானேனு யோசிச்சேன்... சொல்லு.

**ஆண்ட்ரு:** விக்கி, எந்த தொழில்நுட்பத்திற்கும் இரண்டு பக்கம் இருக்கும். Example-க்கு அணு சக்தியை நன்மையாக பயன்படுத்தினால் அதிலிருந்து மின்சாரம் எடுக்கலாம்; ஆனால் அதே அணு சக்தியை வைத்து ஆயுதமும் தயாரிக்கலாம். இப்போது அநேக தேசங்கள் தங்களிடம் அணு ஆயுதங்களை வச்சிருக்காங்களே? அதேபோல் தான்.

**விக்கி:** இதுல என்ன தீமை இருக்கு?

**ஆண்ட்ரு:** அதாவது விக்கி... இப்போ இருக்கிற கணினி, செல்போன், மென்பொருள் ஆகியவற்றை சமூக விரோதிகள் எளிதாக 'ஹேக்' செய்துடுறாங்க இல்லியா? அதேபோல நம் மூளையில் பொருத்தப்பட்ட சிப்-ஐயும் யாராவது ஹேக் செய்துவிட்டால், அந்த மனிதனுடைய முழுக்கட்டுபாடும் வேறு ஒருவர் கைகளில் போய்விடும். அது எவ்வளவு ஆபத்தா மாறிடும்ன்னு யோசிச்சுப்பாரு. அதுமட்டுமல்லாமல் நம்



மூளையில் பொருத்தப்படும் 'சிப்' மூளையில் தொற்றை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கின்றனர். ஆனால் இது இப்போது சோதனையில் தான் இருக்கிறது.

**விக்கி:** இதில் இவ்வளவு சிக்கல் இருக்கா? அப்போ எந்த டெக்னாலஜியாக இருந்தாலும் கொஞ்சம் ஆராய்ச்சி பண்ணி பாக்கணும் போல.

**ஆண்ட்ரு:** அதுமட்டுமல்ல... (என்று சற்று தயக்கத்தோடு சொல்ல வந்ததை நிறுத்தினான்)

**விக்கி:** என்னமோ சொல்ல வந்து மென்னு முழுங்குற?

**ஆண்ட்ரு:** வேணா... நீ சொன்னா கேட்க மாட்ட.

**விக்கி:** பரவால்ல சொல்லுடா...

**ஆண்ட்ரு:** இந்த மாதிரிலாம் கடைசிகாலத்துல வரும் என்று பைபிள்ல போட்ருக்கு, அதபத்தி தான் சொல்ல வந்தேன்.

**விக்கி (சலித்துக் கொண்டே) :** வேண்டாம்னு சொன்னா விடவா போற... சொல்லு.

(ஆண்ட்ரு வேதத்திலிருந்து சில காரியங்களை அவனுக்கு விளக்கிச் சொல்ல... இருவரும் உரையாடிக் கொண்டே தங்கள் இடங்களில் இறங்கினார்கள்).

இவர்கள் இருவரின் உரையாடல்கள் தொடரும்...




தகவல்: வயலா

## தேவ சித்தத்தின்படி வாழ்க்கைத் துணையை தெரிந்துக் கொள்ளுதலும், அதினால் உண்டாகும் ஆசீர்வாதங்களும்!

**பரிசுத்த வேதாகமத்தில் தேவ சித்தத்தின்படியே நடந்த திருமணம் ஆதியாகமம் 24ம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. வயது முதிர்ந்த ஆபிரகாம் தனது குமாரனாகிய ஈசாக்குக்கு திருமணம் செய்து வைக்க விரும்பினார். சாதாரணமாக ஒரு தகப்பன் தன் மகனுக்கு வாழ்க்கைத் துணையை தேடும்போது, அழகான, அன்பான, அறிவான என்று பல குணநலன்களைக் கருத்தில் கொண்டு தேடுவார். ஆனால் ஆபிரகாமோ தேவனுக்கு பயந்த பெண்ணே தனது மகனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையாக வேண்டும் என்று விரும்பினார். ஆபிரகாம் வசிக்கிற கானான் தேசத்தில் அப்படிப்பட்ட குணநலன்களைக் கொண்ட பெண் இல்லாததால், அவர் தனது உறவினர்களிலிருந்தே ஈசாக்கிற்கு பெண் தேடும்படி விரும்புகிறார்.**



ஈசாக்கு ஏறத்தாழ நாற்பது வயதுடையவராய் இருப்பினும், ‘என் வாழ்க்கைத் துணையை என் கண்களுக்கு பிரியமானவளை நானே பார்த்து தேர்வு செய்வேன்’ என்று கூறவில்லை. தேவ சித்தத்தின்படி தன் தகப்பனுடைய முயற்சிகளுக்கு தன்னை விட்டுக்கொடுத்தார். ஆபிரகாமும், தனது முதிர்வயதில் பிறந்த வாக்குத்தத்தத்தின் மகனுக்கு, என்னுடைய பார்வைக்கு சிறந்தவளை, நானே நேரில் பார்த்து தேர்வு செய்வேன் என்று கூறவில்லை. தேவன் காரியத்தை வாய்க்கப் பண்ணுவார் என்று அவரையே விசுவாசித்து, தன் வீட்டில் எல்லாவற்றிற்கும் அதிகாரியுமாகிய தன் ஊழியக்காரனிடம் அந்த பொறுப்பைக் கொடுத்தார்.

அவர் தன் எஜமானுடைய மகனுக்கு ஏற்றத்துணையை கண்டறிய ஏறத்தாழ 1200 மைல்கள் ஒட்டகங்களோடு பயணம் செய்து, அங்கு பெண் வீட்டாரைத் தேடி கண்டறிந்து, அவர்களுடன் பேசி, பழகி புரிய வைப்பது மட்டுமல்லாமல் பெண்ணையும் தன்னுடன் அழைத்து செல்ல வேண்டும். இவர் அந்நிய தேசத்தானாயிருக்க, இவரை நம்பி பெண்

வீட்டார் பெண்ணை அனுப்ப வேண்டும். மணப் பெண்ணும் மனதார பிறந்த வீட்டை விட்டு இவருடன் செல்ல வேண்டும். இதெல்லாம் நடக்க வேண்டுமானால் தேவன் காரியத்தை நடத்த வேண்டும் என்பதை நன்றாய் அறிந்து இருந்தார். எனவே ஊருக்குள் நுழைந்தவுடனே ஒரு கிணற்றினருகே நின்று தேவனிடம் பொறுப்பைக் கொடுக்கிறார். ‘நான் குடிக்க உன் குடத்தை சாய்க்க வேண்டும்’ என்று நான் சொல்லும் போது ‘குடி’ என்றும் ‘உன் ஒட்டகங்களுக்கும் குடிக்கும்படி வார்ப்பேன்’ என்று சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கும் அநுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும் என்று தேவனாகிய கர்த்தரிடம் விண்ணப்பம் செய்கிறார்.

ஒரு மனிதன் குடிப்பதற்கு அவனுக்குத் தண்ணீர் கொடுப்பது எளிது. ஆனால் ஒட்டகங்களுக்கு தண்ணீர் வார்ப்பது எளிதானது அல்ல. ஏனென்றால் பொதுவாக ஒட்டகம் பாலைவனங்களில் வாழும் விலங்கு. நீரில்லாமல்



பலநாள் வாழக் கூடிய மிகச் சிறந்த பண்பைப் பெற்றது (ship of the desert). ஆனால் நீர் அருந்த வாய்ப்பு கிடைக்கும் போது, சாதாரணமாக 100 லிட்டர் தண்ணீர் குடித்து விடுமாம். ரெபெக்காள் தோளில் வைத்திருந்த குடம், மண்ணினாலே செய்யப்பட்டிருக்கலாம். எனவே வெறும் குடமே சற்று கனமாகவே இருக்கும். சுமார் 10 லிட்டர் தண்ணீர் பிடிக்கும் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரு ஒட்டகத்திற்கு மட்டும் பத்து முறையும், பத்து ஒட்டகங்களுக்கு நூறு முறையாவது துரவில் இறங்கி, ஏறி தண்ணீர் எடுத்திருக்க வேண்டும். ரெபெக்காளின் நீடிய பொறுமை, கடின உழைப்பு, விலங்குகளின் மேல் உள்ள கரிசனை, விருந்தோம்பல் குணம், மற்றவர் நலனில் அக்கறை போன்ற நற்குணங்களை வெளிப்படுத்துகிறது. செல்வ சீமானாகிய ஆபிரகாமிடமோ எண்ணிக்கைக்கு அடங்காத விலங்குகள் இருந்ததால், அவற்றை கரிசனையோடு பராமரிப்பதற்கும், தேவதூதர்களும் விருந்துக்கு வந்தால் அவர்களுக்கு விருந்தோம்பல் செய்வதற்கும், எண்ணற்ற வேலைக்காரரையும் கவனித்துக் கொள்ளும் ஆற்றலும் உள்ள ரூபவதியாகிய ரெபேக்காளையே ஈசாக்குக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையாக தேவன் தீர்மானித்திருந்தார்.

பெண் வீட்டாரும் ‘இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது, நாங்கள் நல்லது, கெட்டது எதுவும் சொல்லக்கூடாது’ என்று மகிழ்ச்சியோடு தங்கள் விருப்பத்தை தெரிவிக்கின்றனர். ரெபெக்காளும் ஒரு முன் பின் தெரியாத நபரோடு, போகிறாயா என்று கேட்கும் தன் வீட்டாருக்கு, உறுதியோடு தைரியமாக புறப்பட முன்வந்தது தேவன் மேலுள்ள விசுவாசத்தையே வெளிப்படுத்துகிறது. இருவரும் ஒருவரையொருவர் அதுவரைக்கும் கண்டதில்லை. அழகையோ, திறமையையோ பார்த்தோ பேசிப் பழகியோ வாழ்க்கைத் துணையாக தெரிந்தெடுக்கவில்லை. தேவ சித்தத்தின்படி பெற்றோரின் விருப்பப்படி குடும்ப வாழ்வில் இணைக்கப்படுகின்றனர்.

- **திருமணமாகி 19 வருடங்கள் பிள்ளை இல்லாவிட்டாலும் தன் கணவருக்கு மற்றொரு திருமணம் செய்யாமல் நீடிய பொறுமையோடு, கர்த்தருடைய வேளை வரும் வரை காத்திருக்கிறாள். ஈசாக்கு தன் மனைவிக்காக ஜெபித்தவுடன், ஒரே கர்ப்பத்தில் ‘இரட்டை பிள்ளை என்கிற இரட்டிப்பான ஆசீர்வாதத்தை பெறுகின்றனர்.**

- **ஈசாக்கு விதை விதைத்த போது 100 மடங்கு ஆசீர்வாதமாம். அதாவது புழுவோ, பூச்சியோ, எதிரிகளோ விளைச்சலைத் தொடவில்லை.**

- **சந்ததி ஆசீர்வாதம், பல நூறு ஆண்டுகளாகியும் இவர்கள் சந்ததியாகிய இஸ்ரவேலை’ தெரியாதவர்கள் இன்றும் யாருமில்லை.**

**இவ்வாறு திருமணங்கள் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, ஜெபத்தோடும் குடும்ப நபர்களின் ஒப்புதலோடும், ஆசீர்வாதத்தோடும் நடைபெறுவது எத்தனை மகிழ்ச்சி! அதுவே மிகச் சிறந்த திருமணமும் கூட!!**

**NISUIN BERIYTH** தொடரும்.

# செய்திகள்!

## இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் மின்னணு பொருட்களில் 30% மின்னணு பொருட்கள் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி..!!




சென்னை: இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் மின்னணு பொருட்களில் 30% மின்னணு பொருட்கள் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. மின்னணு சாதன பொருட்கள் ஏற்றுமதியில் 2022 வரை உத்தரப்பிரதேசம், கர்நாடகா போன்ற மாநிலங்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தன. தற்போது தமிழ்நாட்டில் இருந்து மின்னணு பொருட்கள் ஏற்றுமதி செய்வது ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. மற்ற மாநிலங்கள் மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் பின்தங்கியோ அல்லது அதே அளவிலோ உள்ளன. நாட்டில் ஏற்றுமதியாகும் பொருட்களில் மின்னணு பொருட்கள் பங்களிப்பு 2 மடங்கானது தமிழ்நாட்டால் தான்.

தமிழகத்தில் இருந்து நடப்பு நிதியாண்டில் ஜனவரி வரை 61,171 கோடி ரூபாய்க்கு மின்னணு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. நாட்டில் மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது என தமிழக அரசின் தொழில்துறை தெரிவித்துள்ளது. தொலைநோக்கு பார்வை உடைய தலைமைத்துவம், உற்பத்தி மற்றும் துல்லிய பொறியியலில் சிறந்து விளங்குதல், உயர்தர தொழில்நுட்பங்களை கையாளுதல் போன்ற சிறப்பு அம்சங்களால் தமிழகம் சிறப்பான வளர்ச்சியை கண்டுள்ளது. கடந்த 2022 - 23 நிதியாண்டில், தமிழகத்தின் மின்னணு பொருட்கள் ஏற்றுமதி 44,571 கோடி ரூபாய் என்பது நினைவுகூரத்தக்கது.

- 01 ஏப்ரல், 2024 தினகரன்.

## அடுத்த 25 ஆண்டுகளுக்கு இந்தியப் பொருளாதாரம் 8 சதவீதம் வளரும்: ஐஎம்எஃப் செயல் இயக்குநர் தகவல்!

கடந்த சில மாதங்களாக சர்வதேச அளவில் பொருளாதார மந்தநிலை காணப்பட்டு வந்த போதிலும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் பொருளாதாரம் மேம்பட்ட நிலையில் இருப்பதாக சர்வதேச செலாவணி நிதியம் (ஐ.எம்.எஃப்) தெரிவித்து வந்தது.

இந்நிலையில், இது தொடர்பாக ஐஎம்எஃப் செயல் இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி வெங்கடசுப்ரமணியன் மேலும் கூறுகையில், "இந்தியா இதுவரையில் தொடர்ச்சியான அளவில் 8 சதவீத வளர்ச்சியை எட்டியதில்லை. ஆனால், அந்த வளர்ச்சி சாத்தியமானதே. கடந்த 10 ஆண்டுகளில் கொண்டு வரப்பட்டது போல் நல்ல திட்டங்களை மீண்டும் கொண்டு வந்தால் இந்தியாவால் 2047 வரை 8 சதவீதம் வளர்ச்சியை தொடர்ந்து தக்க வைக்க முடியும். நாட்டின் மொத்த ஜிடிபியில் 58 சதவீதம் உள்நாட்டு நுகர்வு மூலமாக வருகிறது. இந்நிலையில் இந்தியா அதன் உள்நாட்டு பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும். வேலை வாய்ப்புகளை அதிகம் உருவாக்குவதன் மூலம் மக்களின் நுகர்வை அதிகரிக்க முடியும். எனவே வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக, உற்பத்தித் துறையில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். உற்பத்தித் துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டுமென்றால், அதற்கு கடன் வழங்குவது சார்ந்து வங்கித் துறைகளில் சீர்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும்.

நிலம், தொழிலாளர், முதலீடு, லாஜிஸ்டிக் உள்ளிட்டவற்றில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது இந்தியாவின் அடுத்தக்கட்ட வளர்ச்சிக்கு உந்துதலாக அமையும்" என்றார்.

- 29 மார்ச், இந்து தமிழ் திசை.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211



# நேரத்தை கையாளுவது எப்படி?

காலம் பொன் போன்றது என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் இன்றைய நாட்களில் பொன்னுக்கும் அப்பாற்பட்டது காலம் என்றால் அது மிகையாகாது. பொன்னும், பொருளும் போனால் அதை சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனால் கடந்த காலத்தை (நேரத்தை) திரும்பப் பெற முடியாது. எனவே கிடைக்கும் நேரத்தை பயனுள்ள வகையில் கையாளுவது எப்படி என்பதைப் பார்க்கலாம்.



## பதிவு செய்யுங்கள்

குறைந்தது ஒரு வாரம் உங்களது நடவடிக்கைகள், எண்ணங்கள் மற்றும் உரையாடல்களை பதிவு செய்வதன் மூலமோ, அல்லது எழுதி வைப்பதன் மூலமோ நேரம் எங்கு வீணாகிறது என்பதை கண்டறியலாம்.

## திட்டமிடுங்கள்

வேலையாக இருந்தாலும் சரி, படிக்க வேண்டிய பாடங்களாக இருந்தாலும் சரி குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டுமென்று திட்டமிட்டு செய்யும்போது, அதில் வெற்றியைக் காண முடியும்.







## கவனம்

ஒரு வேலையை ஆரம்பித்தால் அந்த வேலையை முடித்துவிட்டு அடுத்த வேலைக்கு செல்ல வேண்டும். இடையிடையே தேவையற்ற காரியங்களில் கவனம் செலுத்தாமல் செய்கிற வேலையில் கவனமாக இருங்கள்.

## பட்டியலிடுங்கள்

எதற்கு (வேலை, படிப்பு) முதலாவது முக்கியத்தும் கொடுக்க வேண்டுமோ, அதை பட்டியலிட்டு, அந்தந்த நேரத்திற்குள் முடிக்க தீர்மானியுங்கள்.





## உடற்பயிற்சி

தினசரி உடற்பயிற்சி செய்வதோடு தினமும் 6 முதல் 7 மணி நேரம் தூங்கினால் முழு ஈடுபாட்டோடு எல்லா வேலைகளையும் செய்ய முடியும்.

## தொந்தரவு செய்யாதீர்

மிகவும் முக்கியமான வேலைகளில் ஈடுபடும்போது, போனை Switch off செய்யுங்கள். முன்பதாகவே நண்பர்களிடம் do not disturb (தொந்தரவு செய்யாதீர்கள்) என்று செய்தி அனுப்புங்கள்.





## ஒழுங்குபடுத்துதல்

நாம் வேலை பார்க்கும் மேஜை, கம்யூட்டர், அன்றாடம் பயன்படுத்தும் பைல்களை ஒழுங்குப்படுத்தி வைப்பது அவசியம். இது நம் வேலையை துரிதபடுத்துவதோடு, சரியான நேரத்தில் செய்து முடிக்க உதவியாக இருக்கும்.

## இல்லை என்று சொல்லுங்கள்

உங்கள் வேலையில் எது அவசியம் எது நேரத்தை வீணடிக்கிறது என்று உங்களுக்கு தெரிந்தால் அதற்கு No சொல்ல பழகுங்கள்.



Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 04 -2024
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.


# வாலிபர் எழுப்புதல் கூடுகை 2024

## திருநெல்வேலியில்...

நாள்: மே 19, ஞாயிற்றுக் கிழமை
நேரம் : மாலை 2 மணி
முதல் 5:30 மணி வரை

இடம்: சாரா டக்கர் மேல்நிலை பள்ளி
பாளையங்கோட்டை

செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்

தொடர்புக்கு : 9750955548,
9047480484

## கோவை மாவட்டம் - ஆனைமலையில்...

நாள்: மே 19, ஞாயிற்றுக் கிழமை
நேரம் : மாலை 4 மணி முதல்
இரவு 7 மணி வரை

இடம்: சுலோச்சனா திருமண மண்டபம், சேதுமடை ரோடு,
நெடுஞ்சாலை துறை அலுவலகம் எதிரில், ஆனைமலை

செய்தியும் ஜெபமும்: சகோ. சதீஷ்குமார்

தொடர்புக்கு :
9486037586

## ஆந்திர பிரதேசம் - குப்பத்தில்...

நாள்: ஜூன் 16, ஞாயிற்றுக் கிழமை
நேரம் : மாலை 5 மணி
முதல் 8 மணி வரை

இடம்: Christian Minority Hall,
M.F.C. College Backside, Kuppam

செய்தியும் ஜெபமும்: சகோ. சாம் ஜெபராஜ்

தொடர்புக்கு : 9962085523,
9492381258

## சுரண்டையில்...

நாள்: ஜூலை 13, சனிக்கிழமை
நேரம் : காலை 10 மணி முதல்
மாலை 4 மணி வரை

இடம்: சீயோன் வளாகம்,
சுரண்டை

செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்

தொடர்புக்கு : 9750955548, 9443962141,
9443971759







